www.padippakam.com

# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

ஜூலை, 1993 விலை ரூ.3.



படிப்பகம்

www.padippakam.com

# நாற்று

★

தனக்குத் தானே சொந்தங் கொண்டாடத் தெரியாத ஒருவன் விரயப் பட்டியலின் தலைப்பைப் போல வெற்று முழுவாய் முற்றுப் பெறுவான்.

★

இந்த 'வெளி'யைப் பார்த்து அதிசயிக்கத் தெரியாத மனிதனுக்கும், அண்ணாந்து பார்க்கும் அறிவில்லாத விலங்குக்கும் நூலிழை வேறுபாடுதான். மனிதன் பேசத் தெரிந்த விலங்கு. இது கொஞ்சம் கூடுதல் மரியாதைதானே.

★

மனிதன் தன்னைத் தேடும்போது உன்னதமாய் வெளிப்படுகிறான். தன்னை மறக்கடிக்கும் தன் நலத்தை நாடும்போது அற்பமாய் நொறுங்கிப் போகிறான். தன் ஒவ்வொரு செயலையும் இந்தத் தராசில் நிறுக்கத் துணிந்தவன் வாழத் தெரிந்தவனாகிறான்.



★

அறிய அறிய, அறியாமை பெருகக் காண்பதுதான் அறிவாளியின் சரியான வளர்ச்சி. 'நான் அறியாததா?' என்று அகங்காரம் கொண்டுவிட்டால், பின்னர்- உலகமே தன்னைப் புரிந்து கொள்ள மறுப்பதாகக் குறை சொல்வதிலும், கோபம் கொள்வதிலுமே கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து போகிறான்.

★

பிள்ளைப் பருவத்தில் இருட்டறையில் நுழையவும் துணையின்றிப் படுத்துறங்கவும் அஞ்சினேன். அது ஒரு சுகமான அறியாமை. இப்பொழுதோ, மனிதர்கள் நடுவே நடமாடவும் வெளிச்ச முற்றத்தில் படுத்துறங்கவும் அஞ்சுகிறேன். இது ஒரு குரூரமான அனுபவம். கயமைக் குளத்தின் நீரைப் பருகிக்கொண்டு, தாய்மைப் பரிவின் வருடலுக்கு ஏங்கும் அவலத்தின் அனுபவம்.

படிப்பகம்

www.padippakam.com

கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

ஜூலை, 1993

மாதத்தின் முதல் வாரத்தில் வெளிவருகிறது.

தனி இதழ் விலை ரூ. 3.
ஆண்டுச் சந்தா ரூ. 36.
சந்தாவை M.O. செய்க.

மனித நேயம் வளர்க்கும் இலக்கியத் தெளிவின் ஊற்றுக்கண்.

---

படைப்புகளை அனுப்ப மற்றும் தகவல் தொடர்புகளுக்கு:

ஆசிரியர், கவிதாசரண்,
31, டி.கே.எஸ். நகர்,
சென்னை-600 019.

---

திறனாய்வுக்குப் புதிய நூல்கள் மட்டுமே ஏற்கப்படுகின்றன.

இதழை 580, T.H.Road, சென்னை-21 இலிருந்து வெளியிடுபவரும் ஆசிரியரும்: கவிதாசரண். ஆல்வெல் பிரஸ், 31, T.K.S. நகர், சென்னை-19 இல் அச்சிடுபவர்: திருமதி கவிதாசரண்

படைப்பாளர்களே தங்கள் படைப்புகளுக்குப் பொறுப்பேற்கிறார்கள்.

வெளியிடுவதற்கு ஏற்கப்பட்டவற்றைத் திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

“

வகுப்பு நிறையக் குழந்தைகள். அடைபட்டு மூச்சுத் திணறும் சின்னக் குழந்தைகள். கல்வி அவர்களுக்கொரு நேர்படாத சிக்கல்.

அவர்களைப் பார்த்து, “சூரியன் பூமியைச் சுற்றுகிறதா? அல்லது பூமி சூரியனைச் சுற்றுகிறதா?” என்று கேட்டால், உடனே எல்லாரும் ஒரே குரலில், “சூரியன்தான் பூமியைச் சுற்றுகிறது,” என்று கத்துகிறார்கள்.

அவர்களில் ஒரு குழந்தை மட்டும், “பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது,” என்று தயங்கித் தயங்கிச் சொல்கிறது. பெரும்பான்மையிலிருந்து முரண்படுவதால் கிறுக்குக் குழந்தையாக அது கருதப்படுகிறது.

இதுதான் இன்றைய இந்தியாவின் அரசியல் வாழ்க்கை.

ஜன நாயகம் பெரும்பான்மையால் நிறுவப்படலாம். இங்கே உண்மைகூடப் பெரும்பான்மையால்தான் நிறுவப்படுகிறது. அதுதான் வாய்மை என்று நம்பப்படுகிறது.

‘வாய்மை வெல்லும்’ என்பது இப்படித்தான் சீரழிகிறது.

”

படிப்பகம்

www.padippakam.com

## புத்த தரிசனம்

குன்றத்தின் மீதே — அந்தக்
குன்றத்தின் மீதே — தனி
நின்றதோர் ஆல நெடுமரங் கண்டேன்.

பொன்மரத் தின்கீழ் — அந்தப்
பொன்மரத் தின்கீழ் — வெறுஞ்
சின்மய மானதோர் தேவன் இருந்தனன்.

புத்த பகவன் — எங்கள்
புத்த பகவன் — அவன்
சுத்த மெய்ஞ் ஞானச் சுடர்முகங் கண்டேன்.

காந்தியைப் பார்த்தேன் — அவன்
காந்தியைப் பார்த்தேன் — உப
சாந்தியில் மூழ்கித் ததும்பிக் குளித்தனன்.

*—மகாகவி பாரதியார்*


*விளம்பர உதவி:*

# ஏ பி டி பார்சல் சர்வீஸ்

- பொருள் போக்குவரத்து சம்பந்தமான
அனைத்து பிரச்சனைகளுக்கும் சுலபமான தீர்வு
**ஏ பி டி பார்சல் சர்வீஸ்**

- இருபத்தைந்து ஆண்டுகளாக வணிகப்
பெருமக்களின் நம்பிக்கைக்குரிய தேர்வு
**ஏ பி டி பார்சல் சர்வீஸ்**

- உங்களுக்கு ஏற்றதொரு பார்சல் சர்வீஸ்
**ஏ பி டி பார்சல் சர்வீஸ்**

எங்களது சேவையை உங்களுக்கும் தொடர
எங்களுக்கு ஓர் வாய்ப்புத் தாரீர்!
குறைந்த கட்டணம்... விரைந்த சேவை.

# ஏ பி டி பார்சல் சர்வீஸ்

10/13-15, காளிங்கராயன் தெரு,
ராம்நகர், கோவை-641009.




படிப்பகம்

www.padippakam.com

என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்ற பின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.

கவிதாசரண்
தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மலர் இரண்டு ஜூலை, 1993 இதழ் ஏழு

''தமிழுண்ணிகள்'' தொடர் எழுதிக்கொண்டிருந்த போது நேர்ந்த ஒரு பகல் பொழுதின் அனுபவம். இதை ஒரு சிறுகதையாகவே பரிசீலிக்கலாம்.

# இயக்கம்

இதழுக்கான தொடர் கட்டுரையை இன்னும் எழுதவில்லை.

'இன்றைக்கு, நாளைக்கு' என்று தள்ளிக்கொண்டே வந்தாயிற்று இனியும் தள்ளிப் போடமுடியாது. போட்டால் இதழ் உரிய நேரத்தில் வெளிவராது.

கட்டுரை- மொழி பற்றியது என்பதால், அதன் எல்லா பரிமாணங்களையும் ஒருங்கிணைத்துச் சிந்திக்க ஒரு முழு நாள் வேண்டுமாகப் பட்டது. ஒவ்வொரு நாளையும் இதழுக்கான மற்ற பணிகளே விழுங்கிவிடுவதால் கட்டுரையை எழுதுவதற்கான பொழுதே ஒழியவில்லை.

இந்த நேரத்தில் என் மோட்டார் சைக்கிள் வேறு 'பழுது பார்' என்று நெருக்கத் தொடங்கிவிட்டது.

''காலையில ஒன்பது மணிக்கெல்லாம் கொண்டாந்து வுட்டீங்கன்னா, சாயங்காலம் ஆறு மணிக்கு எடுத்துப் போயிடலாம் சார்,'' என்று மெக்கானிக் சொல்லிவிட்டார்.

சாதாரணமாக ஒரு நாளில் முடிந்துவிடும் என்றால், குறைந்தது ஒரு வாரத்தில் முடித்துக் கொடுத்துவிடும் தேர்ந்த மெக்கானிக்தான் அவர். ஆனால், என் விஷயத்தில் மட்டும் என்னவோ இதுவரை சொன்ன கெடுவைக் காப்பாற்றியே வரு

படிப்பகம்

www.padippakam.com



கிறார். 'பாவம் மனுஷன். பிழைத்துப் போகட்டும்' என்னும் கூடுதல் பச்சாதாபமாயிருக்கலாம். கெடு நீளும் போல் தோன்றினால், மாற்று வண்டி கொடுத்து விடுவார். இந்தத் தடவை சோதனையே போல் மாற்றுக்கும் வண்டியில்லை. இது மாதிரி சந்தர்ப்பங்களில் நான் அவரோடு உட்கார்ந்தே வண்டியை வாங்கிக் கொள்வேன். இம்முறை ஒரு முழு நாளை உட்கார்ந்தே கழிக்க முடியாத நிலை.

இன்று காலை ஒரு முடிவோடே படுக்கையை விட்டு எழுந்தேன். ஒன்பது மணிக்கு வண்டியைக் கொண்டு போய் மெக்கானிக்கிடம் சேர்த்துவிட்டு, ஒரு பஸ்ஸைப் பிடித்து காஞ்சிபுரமோ, மகாபலிபுரமோ சென்று, எங்காவது ஓரிடத்தில் உட்கார்ந்து கட்டுரையை முடித்துக் கொண்டு, மாலையில் திரும்பும் போது வண்டியை எடுத்துக் கொண்டு வீடு வந்து விடலாம் என்பதுதான் அந்த முடிவு.

'அப்பாடா ஒரு வழி கண்டாயிற்று' என்னும் நிம்மதியுடன்- பேனா, எழுதுதாள்கள், வைத்தெழுதும் அட்டை, கீழே போட்டு உட்கார்ந்து கொள்ள வசதியாய் ஒரு பூத்துவாலை ஆகியவற்றை ஒரு பையில் எடுத்து வைத்துக் கொண்டேன்.

இந்தப் பையைப் பற்றியும் ஒன்று சொல்ல வேண்டும். 'சிறு பயணங்களுக்கு உதவும்' என்றே வெகு காலத்திற்கு முன்பு வாங்கி, பயன் படுத்தாமலேயே பொருளோடு பொருளாய் இரும்புக் கிடங்கில் போட்டு வைத்தது. இன்று அதைத் தேடி எடுத்து, பிரித்துத் துடைத்து, என் பயணத்திற்கு துணையாக்கிக் கொண்டதில் அதற்குக் கொள்ளை மகிழ்ச்சி போலத் தன் புது நிறம் சிலிர்த்து, என்னோடு ஊஞ்சலாடிக்கொண்டு கிளம்பியது. ஒரு சாதாரண பைக்குக்கூடப் பயன்பட்டால்தான் சந்தோஷம் போலும்.

ஒன்பது மணிக்கெல்லாம் மெக்கானிக் கடைக்கு வந்து விட்டேன். என் வீட்டிலிருந்து அவர் கடைக்கு பத்து கிலோ மீட்டர் தூரம். நகர எல்லைக்கப்பால் என் இருப்பிடம் என்பதால் இப்படி அமைந்தது.

மெக்கானிக் இன்னும் வரவில்லை. கடைப் பையன்கள் அப்போதுதான் கடையைத் திறந்து, உள்ளே அடை பட்டிருந்த வண்டிகளையும் டயர்களையும் இறக்கி வெளியேற்றிக் கொண்டிருந்தனர்.

எல்லாவற்றையும் வெளியேற்றி, கடையைப் பெருக்கி, காலண்டர் கிழித்து, ஊதுபத்தி கொளுத்தி, சாமி படங்களுக்கு வாசம் ஏற்றும்போது மெக்கானிக்கும் வந்துவிட்டார்.

வண்டியை முழுமையாகச் சரிபார்த்து வைக்கும்படி மீண்டும் மீண்டும் கூறி, பயணம் மேற்கொள்ளும் விஷயத்தையும் சொல்லிவிட்டுக் கிளம்பினேன்.

படிப்பகம்

www.padippakam.com



“பயணம் போறேங்கிறீங்க. சட்டைப் பையில பேனா மட்டும்தான் தெரியுது?” என்றார்.

அப்போதுதான் நானும் பார்த்தேன். நேற்றுப் போட்டுக் கழற்றிய சட்டையிலிருந்து பணம் முதலான பொருள்களை இந்தச் சட்டைக்கு மாற்ற மறந்துவிட்டேன். வேறு வழி?

மெக்கானிக்கிடம் ஐம்பது ரூபாய் கேட்டேன். அவர் நூறு ரூபாயும் பஸ்ஸுக்குக் கொஞ்சம் சில்லறையும் கொடுத்தார். நாணயம் பாதுகாக்கப்படும்போது உதவிகள் தாராளமாகின்றன.

இந்த மெக்கானிக்கை என்னால் விடமுடியாமல் தொடர்வதற்கு இதுவும் ஒரு காரணம். தொழில் பாட்டுக்குத் தொழில். அதற்கு மேல் கொஞ்சம் நேசம், ஒரு சின்னப் பூவைப் போல, ‘சும்மாதான்’ என்பது போலத் தொட்டுச் சிரிப்பது ஒரு சுகமான அனுபவம்தான்.

அங்கிருந்து பஸ் பிடித்து, பிராட்வே பஸ் நிலையம் வருவதற்குள் பத்தரை மணியாகிவிட்டது. பஸ்களின் தாறுமாறான நெரிசலில் புகுந்து நடந்து, ‘மகாபலிபுரம்’ என்று நெற்றியில் நாமம் தரித்து முன்னும் பின்னுமாக நகர்ந்து கொண்டிருந்த ஒரு பஸ்ஸில் உடனடியாக ஏறி உட்கார்ந்து கொண்டேன்.

டிக்கட் கொடுத்து வந்த கண்டக்டரிடம், “எப்ப புறப்படுது?” என்றேன். “இதோ,” என்றார். ‘இதோ’ என்பது அரைமணி நேரத்திற்குச் செல்லுபடியாகும் போலும். பஸ் பதினோரு மணிக்குத்தான் புறப்பட்டது. டிக்கட் விலை ஒரேயடியாகக் கூடியிருப்பதாகப் பட்டது.

பஸ் தாம்பரம் போய்ச் சேர்ந்த போதுதான் விளங்கியது- இது செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் வழியாக ஊர் சுற்றிக் காட்டிக் கொண்டு போகும் பஸ் என்பது. சுற்றுலாவுக்கான மகாபலிபுரத்திற்கு இப்படிச் சுற்றலாகப் போவதுதான் சரியென்று பட்டது. விசாரிக்காமல் ஏறிவிட்டேன். நேர விரயத்திற்கு இப்போது நொந்து பயனில்லை.

வழி நெடுகிலும் பஸ் விரைகையில்- காற்று கிழிபடுவதும், காட்சிகள் ‘அட, போயேன்’ என்று பின் தங்குவதும், பஸ் நிற்கையில் பயணிகள் ஏறுவதும், இறங்குவதும், காத்திருப்பதும், மனித முகங்களில் பளீரிடும் பல் வரிசைகள் கரிய பலகையில் பூக்கும் வெள்ளைப் பூக்களாய்ப் பெருகிக் காவிய நேசம் காட்டிக் கரைவதுமாக...

என் கவனம் கலைவுற்றுத் தாவும் போதெல்லாம் அதை இழுத்துப் பிடித்து, என் கட்டுரைக்கான கருத்தோட்டத்தில் ஒருமைப் படுத்த முயன்றவனாய்ப் பயணித்தேன்.

படிப்பகம்

www.padippakam.com



திருக்கழுக்குன்றம் கடந்த போது, தினப்படி கழுகு என் கவனத்தில் வட்டமடித்தது. அதையடுத்து, சாலையோரங்களில் அங்கங்கே இறைந்து கிடக்கும் வீராணம் குழாய்கள், சாலையை அடுத்து பாம்பு பிடிக்கும் ஆதிவாசிகளின் இருப்பிடங்கள், ஏரிக்கரைகள், காடுகள், உப்பங்கழிகள், பக்கிங்ஹாம் கால்வாய், உதிரியாய்ச் சிற்பம் தாங்கும் பாறைகள்—

மகாபலிபுரத்தை பஸ் அடைந்த போது பிற்பகல் மணி இரண்டு.

இறங்கிய உடனே வயிற்றுக்குப் போட்டுக் கொண்டேன்.

'நறுக்கு- நறுவிசு' பார்க்கிற எந்த ஜென்மத்தையும் இந்த ஒட்டல்கள் சுத்த பரப்பிரம்மமாக்கிவிடும் என்னும் உண்மை கரிசல் காட்டின் உழு படைக் கோடாய் கவனத்தைக் கீற, சாப்பிட்ட கையோடு சற்றும் தாமதியாமல் பையைத் தூக்கிக் கொண்டு இடம் தேடிக் கிளம்பி விட்டேன்.

போகிற நடையில் அர்ச்சுனன் தவம் உரசியது. ஒரு பெண்ணின் கரம் பற்றும் போட்டியில் அந்தணச் சிறுவனாய்ப் பொய் வேடமிட்டு, வில்லில் நாண் ஏற்றி, மீனைக் குறி பார்க்க அதன் பிம்பத்தை உற்றுப் பார்த்து நின்ற போது, எல்லார் பார்வையிலும் தன்னந் தனியனாய் நின்ற அர்ச்சுனன், இங்கே சுழி முனையில் தன்னைச் சுருக்கியடக்கி, தவத்தில் அமர்ந்ததும் உலகமே அவனாகிவிட்டதே. இல்லாமலா உலக உயிர்கள் யாவும் அவனோடு சமாதியாகியுள்ளன!

'போதுமே. கட்டுரை எழுத வந்தாய். மறந்துவிடாதே. இடம் தேடு. கவனம் குவி.'

ஒரு சின்ன சதுரத்தில் அடிப்பாறையைத் தொட்டுக் கொண்டு, 'இதோ, விழப்போகிறேன்' என்று பயங் காட்டியவாறு அசைவில்லாத நாட்டியம் காட்டும் அந்த ஆனைப் பாறைக்கடியில், இரண்டு மனிதர்களின் உறக்கத்தை ஒரு வெள்ளாடு அசை போட்டுக் கொண்டிருக்க, நான் எதிர்த் திசை திரும்பி, பழைய கலங்கரை விளக்கை நோக்கி நடந்தேன்.

மொட்டைப் பாறைகளில் பட்டுத் தெறிக்கும் சூரிய ஒளிச் சிதறலால் காற்று சூடேறி அசைவற்றுப் புழுங்கியது. ஆங்காங்கே மனிதர்கள் நடமாட்டம் இருந்தது. வழியில் ஒரு மோர்க்காரி உட்கார்ந்திருந்தாள். ஒட்டல் சுத்தத்தைவிட மோர்க்காரி சுத்தமாகத்தான் தெரிந்தாள். ஆனால் மனித நெருக்குதலில் ஒட்டல் பீழை சகிப்புள்ளாகிவிட, ஒற்றைப் படும் மோர்க்காரியின் பானை—குவளைகளைச் சகித்துக் கொள்வது ஒரு தகுதி மீறலாக உறுத்தியது.

படிப்பகம்

www.padippakam.com



நிழலான, கண் மறைவான ஓர் இடம் எங்கேயும் கிடைப்பதாகத் தெரியவில்லை. மேலும் அன்றாடக் கவலைகளைச் சற்று இறக்கி வைத்துவிட்டு, சிற்பங்களை ரசிப்பதாகப் பேர் பண்ணிக் கொண்டு, குறியற்ற தடங்களில் நடமாடி சலிக்கின்ற மனிதர்கள் நடுவே, ஒருமையுணர்வோடு உட்கார்ந்து கட்டுரை எழுதுவதென்பது அவர்களை அவமதிக்கக் கையாளும் வழிமுறை போலத் தோன்றியது.

மலையை விட்டு இறங்கி கடற்கரைக் கோயிலை நோக்கி நடந்தேன். அங்கேயும் நிழலில்லை. கோயிலை ஒரு சுற்று வந்தேன். காற்றில் கரையும் சிற்பங்களைக் கொஞ்சம் நெருக்கமான தோழமையோடு பார்வையால் வருடிய போது, மனச் சிராய்ப்பில் உப்புக் கோடாய்ச் சிணுக்கியது.

சுமார் ஒன்றரை மணி நேரம் ஓரிடத்திலும் உட்காராமல், நிற்காமல், சுற்றி யலுத்து பஸ் நிலையத்திற்கு மீண்டும் வந்தேன்.

இங்கே பொழுதை வீணடிப்பதைக் காட்டிலும் சீக்கிரமே சென்னை திரும்பினால் அங்கேயாவது உட்கார்ந்து எழுதலாம் என்று தோன்றியது.

நான்கு மணிக்கு சென்னை திரும்பும் பஸ்ஸில் ஏறினேன். திரும்பும் பயணத்தில் என்னை ஒன்றும் சலனப்படுத்தவில்லை. ஆனால் கட்டுரை தொடர்பாகவும் மனம் செல்லவில்லை. எவ்வித சிந்தனையுமற்று ஒரு சிறுவனைப் போல பஸ்ஸின் ஓட்டத்தோடு ஒன்றிப் பயணம் செய்தேன்.

தங்கக் கடற்கரையைக் கடக்கும் போது ஒரு கருத்து பளிச்சிட்டது:

'இன்று ஒன்றும் எழுதிவிடக் கூடாது என்று என்னைத் தற்காத்துக் கொள்வதற்காகவே இந்தப் பயணத்தை மேற்கொண்டேனோ!'

பஸ் எல். ஐ. சி. க்கு எதிரே உள்ள நிறுத்துமிடத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது ஒரு விஷயம் முற்றாக விளங்கியது:

'எழுதுவதற்கு இன்று என்னிடம் ஒன்றும் இல்லை. எழுத்தின்றி, இயக்கமின்றி ஒரு வெற்றுத் தாள் மாதிரி இப்போது நான். இதைப் புரிந்து கொள்ள ஒரு பகல் முழுதும் செலவிட்டிருக்கிறேன்.'

இறுக்கம் தளர்த்திக் கொண்டேன்.

'இங்கேயே இறங்கி, காப்பி குடித்து விட்டு, அவசரமில்லாமல், நிதானமாகப் போய் வண்டியை எடுத்துக்கொண்டு . . .'

அந்த நிறுத்தத்தில் பஸ் நின்றதும் நான் இருக்கையை விட்டு எழுந்து கொண்டேன்.

படிப்பகம்

www.padippakam.com



எனக்கு முன் இருக்கையில் அமர்ந்திருந்த நடுத்தர வயது மனிதரும் பெண்மணியும் எனக்கு முன்னால் நகர்ந்தனர். அவர்கள் இறங்யகிதும் தொடர்ந்து நானும் இறங்கிக் கொண்டேன்.

வழி விலகாமல் நடந்த அவர்களை முந்த முயலாமல் அவர்கள் பின்னாலேயே சற்றுத் தூரம் நடந்தேன்.

பத்துப் பதினைந்து எட்டுகள் நடந்ததும் அந்த மனிதர் சற்றுத் தளர்ந்தாற்போல் ஒதுங்கி நடந்தார். அந்தப் பெண் மணி ஒரே சீராக நடந்து போய்க் கொண்டிருந்தாள்.

அடுத்து என் பார்வையில் அந்த மனிதர் நின்று விட்டதும் அந்தப் பெண் திரும்பிப் பாராமல் போய்க் கொண்டிருந்ததும் என்னைச் சட்டெனப் பாதித்தன.

நான் அந்த மனிதரைக் கடந்து, நடையை எட்டிப் போடுவதைத் தவிரத்து அந்தப் பெண்மணியின் வேகத்துக்கு அவள் பின்னாலேயே நடந்தேன். மனம் 'என்ன? என்ன?' என்று என்னைத் தொட்டுத் தொட்டு முகம் பார்த்தது.

காலையில் மூடிய என் பையைஇன்னமும் நான் திறக்கவே இல்லை என்பது ஒரு குறுக்கீடு போல் அப்போது ஞாபகத்திற்கு வந்தது. முன்பு கலைஞர் சிலை இருந்து எம். ஜி. ஆர். போன கையோடு உடைந்த பீடமாக நிற்கிறதே, அந்த இடத்திற்கு வந்ததும் அந்தப் பெண்மணி அரைத் திருப்பலாகப் பின்னால் கண்ணை ஓட்டினாள்.

அப்போதுதான் அவள் முகத்தைப் பார்த்தேன்.

எந்தவிதப் பூச்சுமில்லாத சராசரி பாமரப் பெண்மணி.

ஒரு மருமகனோ, மருமகளோ சொந்தம் கொண்டாடக் கூடிய ஒண்டுக் குடித்தனக்காரியாய் இருப்பாள். 'ஓடற தண்ணீலே வுழுந்தாச்சு. கைய கால ஒதச்சிக்கிட்டு என்ன ஆவப் போவுது? தண்ணியோடவே மொதந்து போயி அடுத்த கரையில ஏறிக்கிட்டா ஆச்சு' என்பதான பாவம்·

அவள் தன் தலையைத் திருப்பிக் கொண்டாள். மேலும் இரண்டு எட்டு நடந்ததும் இடுப்பில் மறைவாய்ச் செருகியிருந்த ஒரு சுருக்குப் பையை இடது கையால் இழுத்து எடுத்து, அதை இரு கைகளாலும் பிரித்தாள். அதனுள்ளிருந்து நான்காய் மடித்து வைத்திருந்த ரூபாய் நோட்டுகளை எடுத்து உடம்போடு ஒட்டினாற் போல் உள் வாங்கிய கைகளால் மடிப்பு நீக்கி நடந்தபடியே எண்ணினாள். நெருக்கத்தில் நடந்த என் கடைக் கண்களுக்குச் சில பத்து ரூபாய்த் தாள்கள் தெரிந்தன.

ஆக, என்னைச் சுற்றி உலகம் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

# கடிகாரம்

தெலுங்கு மூலம்: டாக்டர் தேவராஜு மகாராஜு

தமிழில்: சாந்தா தத்

நீ
என் வீட்டுள் அடி வைத்த தருணத்தில்
என் மேஜை கடிகாரம் மட்டுமின்றி
நின்று போயிருந்ததென் இதயக் கடிகாரமும்கூட.

உன்
கரம்பட்ட ஸ்பரிசத்தால் என் இதயக் கடிகாரம்,
என் கர ஸ்பரிசத்தால் மேஜைக் கடிகாரம்,
அசைவின் ஆரம்பம் அக்கணம்.

உனக்கு கடிகாரம் கேவலம் கடிகாரம் மட்டுமே;
எனக்கது யுகங்களின் நிசப்தம்;

நிராசை நிராதரவை நிர்மூலமாக்கிய
ஓர் இயந்திரம்.
கட்டியாய் இறுகிப் போன காலத்தை
கலகலத்து ஓடச்செய்த யந்திரம்.

இரு முட்களாய் நீயும் நானும்
உணருகிறேன் கடிகார டயல்
உருண்டை உலகமென;

இரவு பகலாய் எண்களை மைல் கற்களாய்
பின்னே பின்னே தள்ளியபடி—
சந்தித்து பின் பிரிந்து,
மீண்டும் சந்திக்கத் தவித்து,
சந்தித்து பின் பிரிந்து—
நிரந்தரத் துணைகளாய்,
எதிர் காலத்துள் நுழையும் நிரந்தரப்
பயணிகளாய்,
வாழ்வைப் பகிர்ந்து கொள்ளும்
பங்குதாரர்களாய்,
அது நம்மை ஆகச் சொல்வது போல்
உணருகிறேன்.

உன் உணர்வும் அதேயாக உருகுகின்றேன்.

உனக்கது வெறும் காலம் காட்டும் கருவி மட்டுமே
உணருகிறேன் நானதை மொத்த வாழ்க்கையென.


ஸ்டீல் ஃப்ரேம் கண்ணாடிக்குள் நின்று
கவர்ச்சியாய்க் கண் சிமிட்டும் கடிகாரம்.
உள்ளுக்குள்
அவ்வளவு அழகல்ல; அத்தனையும் சிக்கல்.

படிப்பகம்

www.padippakam.com



வாழ்கையின் பயங்கர பிரச்சினைகள் போல,
கிடுக்கிப் பிடியாய் இறுகப் பின்னிய
விஷ வட்டம் போல,
புகையாய் நழுவும் விழைவுகள் போல,
கொழுந்து விட்டெறியும் ஆசைகள் போல,
மறைகள், ஸ்ப்ரிங்குகள், கிர்ரென
சுழன்றபடி; சக்கரங்கள்,
தகடுகள், துகள்கள்,
அவ்வளவும் அத்தனையும் மூடி மறைத்தபடி
அழகான வாழ்க்கை ஃபிரேம்!
அத்தனையும் இல்லையெனில் உள்ளுக்குள்
ஜீவனேது கடிகாரத்திற்கு?
டிக் டிக் என்னும் அதன் மெல்லொலி
இதய லப் டப் ஒலிக்கிணையாக,
எப்போதும் எந்நேரமும் கடிகாரம்
எனக்குத்
தெரிகிறது இதயமாய்த்தான்.



## அப்பா போயிட்டார்

**க. அம்சப்ரியா**

முன் அறையின் சாய்வு நாற்காலி
ஆடலற்று உட்கார்ந்திருக்க—
அதட்டலான சப்தமற்று
அறைகள் மௌனித்திருக்க—
தினமுகத்தின் தரிசனமற்று
சுவர்ச் சாமிகள்
ஏங்கிப் போக—
பூஜைக்கென பூத்த பூக்கள்
உதிர்ந்து போனதில்—
நம்பத்தான் வேண்டியிருக்கிறது
அப்பா போயிட்டார்...

படிப்பகம்

www.padippakam.com



# சுயமற்ற இறைமை - ஹைகூ

நெல்லை சு. முத்து

1887ஆம் ஆண்டு நைல் நதி தீரத்தின் குப்பைகளுக்கிடையில் கண்டெடுக்கப்பட்ட 'ஏழு சிறு வாக்கியங்களில்' ஐந்தாவது, கிருஸ்துவின் வாக்காகக் குறிக்கப்படுவது, சுட்டிக் காட்டும்,

*ஏசு சொல்கிறார்:*
*பாறையை உடையுங்கள்*
*என்னைப் பார்ப்பீர்கள்,*
*மரத்தை வெட்டுங்கள்*
*அங்கே நான் இருப்பேன்.*

—என 'இப்படித்தான்' என்ற உணர்வின்றித் தன்னில் எல்லாமாயும், எல்லாவற்றில் தானுமாயும் பிணைந்து கலந்து இணையும் பிரிவு அறியாக் கலப்பு நிலையே சுயமற்ற தன்மை. இது ஸென் கோட்பாட்டின் அடிநிலை நாதம் என்பார் டாக்டர் தி. லீலாவதி. (இதுதான் ஹைகூ)

## விவிலிய ஹைகூ

இயேசு புராணம் இந்த ஹைகூக்களில் பெரும்பாலும் ஊடுபாவி இருக்கின்றது.

*கல்லறைக்கும் பசியோ?*
*கையாய் ஏந்துகிறது*
*சிலுவையை*

(தீவின் தாகம்)என்பது தற்குறிப்பேற்ற ஹைகூ.

*இடதோ வலதோ*
*கன்னத்திலேயே அடியுங்கள்*
*வயிற்றை விட்டு*
(வைரப் படிகங்கள்)

*ஒரு கன்னத்தில் அடித்தான்*
*மறு கன்னத்தைக் காட்டினேன்*
*அங்கும் அறைந்தான்*
(நட்சத்திரவிழிகள்)

அதிலும் தீவின் தாகத்தில் இந்த விவிலிய மேற்கோள்கள் அதிகம்.

*ஒரு கன்னத்தில் அறைந்தால்*
*இரு கன்னத்திலும் அறை*
*இலங்கை புத்தன்*

*கேளுங்கள் கொடுக்கப்படும்*
*கேட்டேன்*
*கன்னம் வலிக்கிறது.*

*குற்றம் செய்யாதவர்*
*கல்லெறியட்டும்*
*யாரும் எறியவில்லை அவள்மீது*
*சொன்ன ஏசுவும்தான்*

*கர்த்தராகிய ஏசுவே*
*அன்றென்ன இடைத் தேர்தலா?*
*மூன்றாம் நாள் உயிர்ப்பு*

அரசியல் அங்கத ஹைகூக்களாகவும் இவை பரிணமிக்கின்றன.

பரிமளமுத்துவின்,

*இதயத்தின் இறுக்கம்*
*இதழ்களின் மௌனம் இங்கே*
*சிலுவையில் நான்*

(இ)லையுதிர் காலம் நிரந்தரமல்ல எனும் ஹைகூ வேதனையைக் கூட சுகமாக்கி விடுகின்றது.

*சுத்தியலால் ஆணியடித்து*
*சுவரில் மாட்டிய படத்தில்*
*சிலுவையில் ஏசு*
(கவிதாசரண், மே 92)

படிப்பகம்

www.padippakam.com



என்று இவரே 'ஒளிமொட்டு' ஹைகூவில் விசனிக்கிறார். 'சின்னஞ் சிறு மலர்' என்ற தலைப்பின் கீழ் சூர்யராஜன் எழுதிய ஹைகூக்களிலிருந்து ஒரு ஹைகூ

*சிலுவை படர*
*உடல் தந்தார்*
*ஏசுவும் பாரிதான்*
(செந்தூரம் மார்ச் 1992)

அவ்வாறே முரண் ஹைகூ தொனியில் சாத்தானையும் விடவில்லை கவிஞர் துறவி தனது 'மூக்குத்திப் பூக்க'ளில்:

*சாத்தானின் கழுத்தில்*
*சிலுவைச் சங்கிலி*
*சஞ்சலத்தில் ஏசு*

*ஆதாம் ஏவாளுக்கு*
*ஆடை கட்டி வைத்தது*
*சாத்தானின் ஆப்பிள்*

*உயிர்த்தெழுந்த ஏசு*
*மரக்கடை ஓடினார்*
*விலை பேசப்படும் சிலுவை*
(சிறகுகளின் சுவடுகள்)

வினை விதைத்தவன் வினையறுப்பான்' என்றோ, 'வாளெடுத்தவன் வாளால் அழிவான்' என்றோ வரும் வேத வாக்கியங்களின் இயல்பினை கழனியூரனின் நட்சத்திர விழிகளில் காணலாம்.

*வெட்டி வெட்டிச் சாய்த்தவன்*
*ஒரு நாள் விழுந்தான்*
*வெட்டப்பட்டு*

அவ்வாறே "உங்களில் பாவம் செய்யாதவர் அவள் மேல் கல்லெறிக" என்று மரிய மக்தலேனா முன்னிலையினைப் பச்சாதாபமுடன் அறிவுறுத்தும் ஏசுவின் போதனையை,

*சாக்கடையைப் பற்றிக்*
*கவலைப்படும்*
*நம் விரல் நுனிகளில்*
*அழுக்கு*

(நட்சத்திரவிழிகள்)

என்றொரு ஹைகூ வழங்குகிறது.

## ஹைகூ பக்தி

ஹைகூவானது கணத்தாக்கில் எழும் அனுபவ வெளிப்பாடாகும்— ஒரு மின்னல் மாதிரி. அன்றி காத்திருந்து பிரசவிப்பது ஹைகூ என்றில்லை; நல்ல கவிதையுமாகாது. 'தாராமதி' இதழாசிரியர் குன்றம் மு. ராமரத்னம் 11-2-93 அன்று குருவாயூர் கோயிலுக்குள் நுழையும் முன்னதாக ஆசாரப்படி மேல் உடைகளைக் கழற்றி வைத்துச் செல்லும் பக்தர்களை (பக்தையரை இவ்விதி கட்டும்படுத்தாது.) கண்டு நெஞ்சில் துள்ளிய ஹைகூவினை மறுநாளே எனக்கு எழுதி அனுப்பினார். கடிதத்தில் வந்த நல்ல ஹைகூ இது:-

*புற்றின் முகப்பை அடைந்ததும்*
*சட்டை உரித்துக் கொண்டன*
*ஆதிசேடன்கள்*
*கேரளத்தில் ஆலயப் பிரவேசம்*

சென் பௌத்தக்கொள்கையின் தத்துவார்த்த வெளிப்பாடாக அன்றி வெறும் பக்திப் பாசுரங்கள் மாதிரி ஹைகூ சிதைபடலாகாது.

'ஒருமைப்பாடு' என்ற தலைப்பில் டாக்டர் கு. மோகனராசு பாடும் ஒருலக ஹைகூ இது:-

*எத்தனையோ அணுக்கள்*
*எதிர்புதிராய் நரம்பின் சேர்க்கை*
*ஒன்றே உயிரின் ஒளி*
(உலகின் அமைதி நோக்கி)

இந்தியக் கவிஞர் அலீம் சபா ரவீதி உருது மொழியில் எழுதி சஜ்ஜாத் புகாரி தமிழாக்கியுள்ள ஹைகூக்கள் 'பேசும் விரல்கள்' எனும் நூலில் இடம்

படிப்பகம்

www.padippakam.com



பெறுவது இவ்வாறு:-

அணுவில் உறை
நின் சக்தி சொரூபங்கள்
அருட்சுடர் நீ

சத்தியத் தூதர்
ஈர்க்கும் அழியாச்சுடர்
உண்மையின் விதி

தன்னை மறந்து
அருட்கடல் புகுந்தேன்
சஞ்சலமில்லை

ஆள்பவன் அடிமை
இம்மை மறுமை
வியத்தகு புதிர் நீ

உலகாளும் இறைவா
மாசுமருவற்ற
மாபெரும் அருட் சோதி

காலத்தின் காலடியில்
விண்ணும் மண்ணும் வணங்க
எல்லாம் ஒளிமயம்

மதீனா மன்னன்
ஈருலக வழிகாட்டி
ஒளிரும் வைரமே

உண்மைக்கு சமர்ப்பணம்
அகிலத்தின் அமைப்பும்
ஜொலிப்பும்
அல்லா, ஈஸ்வரன், இராமன்

இந்நூலில் தரப்பட்டுள்ள ஹைகூக்களில் ஜப்பானிய யாப்புமரபுக்கேற்ப5-7 5 அசைகளைப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. சான்றாக,

பாப்-கீ-பஸ்-தீ-மே
ஆ-ஷா-வோ-கீ-தன்-டீ-தூப்
தின்-தே-மஸ் தீ-மே

என்கிற உருது மொழி மூலமும் ஜப்பானிய ஹைகூ போலவே ஒழுகிச் செல்கின்றது. இதன் தமிழாக்கம் வருமாறு:-

பா-வத் தின்-ஊ ரில்
ஆ-சை-யின்-கு-ளிர்-வெ-யில்
ஓ-அந்-த-நாட்-கள்

ஆயினும் தமிழின் 7-5-7 மரபுகளை அறுத்தெறிந்து, வடமொழியில் மலையாளக் கவிதை யாப்பில் கையாளப் பெறும் லகு, குரு அசைவுகள் 'பேசும் விரல்களின்' 50 ஹைகூக்களில் பயிலக் காண்கிறோம். தனிக் குறில் 'லகு' வென்றும் குறில் அல்லது நெடிலுடன் ஒற்றும், தனி நெடிலும் 'குரு' வென்றும் வழங்கும் வட மொழி மரபினை ஜப்பானிய ஹைகூ யாப்பினோடு ஒத்தியையுமாறு புனைந்திருப்பது இந்த மொழி பெயர்ப்பின் சிறப்பு.

## சன்னிதான ஹைகூ

"பாதங்கள் ... படிக்கட்டுகள்
ஏறியதும் சன்னதிக்கு கும்பிடு
நன்றியில்லா மனிதன்"

(சிறகுகளின் சுவடுகள்)

என்கிற துறவியின் ஹைகூ ஏற்றிய படிக்கட்டினை ஏற்றிப் பாடுகிறது.

"நகை போட்ட பக்தர்கள் எல்லாரும் வந்து சேர்ந்தார்; ஏசுநாதர் மட்டும் அங்கு வரவில்லையே" என்று ஆடம்பரமாக வரும் பகட்டாளரை ஏளனம் செய்வார் புரட்சிக்கவி பாரதிதாசன். கோயிலுக்குள் ஜனநெருக்கடி; பூசாரியின் மந்திரச் சந்தடி — இவற்றினால் கர்ப்பக் கிருகத்தினுள் மூச்சு முட்டுகிறது கடவுளுக்கு என்றொரு ஏகடியம் துறவியின் இந்த ஹைகூவில்:-

"கூட்ட நெரிசல்;
மந்திர ஓசைகள்;
மூச்சுத் திணறும் கடவுள்"

(சிறகுகளின் சுவடுகள்)

தவிர, கோவிலுக்குள் நிதம் 'தேவி தரிசனம்' தேடிவரும் வாலிபங்களை வகையாகச் சுட்டிக் காட்டும் மெல்லிய நகைச்

படிப்பகம்

www.padippakam.com



சுவை யதார்த்த ஹைகூவா கிறது இதே கவிஞரிடம்,

''கோவிலில் கற்பூரம்
ஏற்றினேன்;
ஜோதியில் தெரிந்தது
அருகில் நின்ற பெண் முகம்''
(சிறகுகளின் சுவடுகள்)

## காவிய, புராண ஹைகூக்கள்

பெரும்பாலும் காவிய நிகழ்வுகளும், புராணச் செய்திகளும் புதுக் கவிஞர்களை உசுப்பிக் கொண்டே இருக்கும்.

''சிவன் மட்டுமல்ல
பல்லவனும் அர்த்த நாரீ
இடப்புறம் பெண்கள்''
(செந்தூரம் பிப்ரவரி 92)

சூர்யராஜனின் இந்த ஹைகூ ரசிப்புக்குரியது.

'நீறுபூத்த நெருப்பாக'க் கிடந்த கங்கு கவிஞர் தமிழன்பனிடம் வெளிப்படுவது இவ்வாறு:

''மன்மதச் சாம்பலில்
மறைந்து கிடந்தது ஒரு கங்கு
சிவன் எரிந்தான்''
(சூரியப்பிறைகள்)

சிவபெருமானின் தவத்தை தனது மலர்க் கணை வீசிக் கலைத்த மன்மதனை நெற்றிக் கண்ணனார் வெகுண்டெரித்த புராணம் ஹைகூவானது போலவே காப்பியங்களும் ஹைகூ பிறப்பிடங்களாயின தமிழில்:

''கண்ணகி உடைத்த
சிலம்பின் பரல்கள்
பாண்டியன் விரலில்
மோதிரமாய்''
(சிறகுகளின் சுவடுகள்)

என்ற ஹைகூவில் மூன்றாவதடி முரண் கவனிப்புக்குள்ளாகிறது.

அவ்வாறே இதிகாசங்களைப் புரட்டிப் போடும் ஹைகூக்கள் சிலவும் உள்ளன.

''படை திரட்டும் பாண்டவர்
பாஞ்சாலி முடித்த கூந்தலில்
பூச்சூட்டும் துரியோதனன்''
(சிறகுகளின் சுவடுகள்)

துரியோதனன் - திரெளபதி இணை போலவே, கட்சி தாவிய அனுமன் பற்றித் துறவி பாடுவது:

''அசோக வனத்தில்
அஞ்சி நடுங்கும் சீதை
இராவணன் விருந்தில்
அனுமன்''
(சிறகுகளின் சுவடுகள்)

மேலும் இக்காலக் கூட்டுக் குடும்பத்தினுள் இழந்துவரும் சகோதரப் பிணைப்பை அங்கதமாக—ஆனால் நேரடியாகக் கூறும் ஹைகூ இது:

''ராமன் பாதுகை
விற்ற பணத்தில்
மகுடத்திற்கு மெருகேற்றும்
பரதன்
(சிறகுகளின் சுவடுகள்)

எனினும் சூர்யராஜனின் இந்த ஹைகூ வாசகரை என்னவெல்லாமோ சிந்திக்கத் தூண்டுகிறதே!

''கர்ணனுடன் கூடப் பிறந்தது
கவச குண்டலம்
மட்டுமா?''
(செந்தூரம் பிப்ரவரி-மார்ச் 92)

''இன்பத்தை நாடாதே! இறையை நாடு! இருந்தது, இருக்கிறது, இருக்கப் போவது அனைத்தையும் நேசித்தலே வாழ்வு! இதுவே நிரந்தரமானது. முரண்பாடுகள் அழியும் இடம் இதுதான்'' என்பது அறிஞர் கார்லைல் உபதேசம்.

இந்த முரண்மைநிலை என்பது எதிரும் புதிரும் அல்ல.

படிப்பகம்

www.padippakam.com



''இறைவன் சொர்க்கத்தில் இருக்கிறான்! உலகில் அனைத்தும் நலமாக இருக்கிறது''—

பிரௌனிங் கூறும் இந்த முரண் அழகே ஹைகூ உயிர்நாடி.

இன்மையில் உண்மை தேடும் முனைப்பு முரண்களில் முகிழ்ப்பது ஹைகூ என்பர்.

The Mind is in its own place
It can make a Hell of Heaven
And a Heaven of Hell.

என்று மில்டனின் ''இழந்த துறக்க'த்தில் (Paradise Lost) சாத்தான் கூறுவதும் சிந்திக்கத் தக்கது.

''மனம் இருந்த இடத்தில் இருக்கிறது.
அதுவாகவே சொர்க்கத்தை நரகமாக்கும்!
நரகத்தையும் சொர்க்கமாக்கும்'

காலப்போக்கில் இந்த முரண் தன்மையினை ஆன்மீகத்தில் மட்டுந்தான் கண்டுணர வேண்டுமென்பதில்லை.

இறைமை நிலைக்கு அப்பால் வாழ்வியல் நடைமுறையிலும் முரண் பட்டுணர்ந்தால் சிறந்த ஹைகூக்கள் உதயமாகும்.

---

## வசந்த காலமே!

மூலம்: சரோஜினி நாயுடு

தமிழில்: என். ஆர். தாசன்

வசந்த காலமே, ஓ வசந்த காலமே,
உனது ஜீவசாரம்தான் என்ன?
புல்புல்லின் கீதம், ரோஜாவின் புன்னகை,
நிலவொளியின் இறக்கைகளில்
நர்த்தனமிடும் பனித்துளி,
மணமகளின் நம்பிக்கை, பரவசத்தின் இதழ்கள்
உற்றுப் பார்த்திருக்கும் பெண்ணின் கனவு,
இவையா உனது ஜீவாசாரம்?

வசந்த காலமே, ஓ வசந்த காலமே,
உனது ரகசியம்தான் என்ன?
மந்திரசக்தி தளும்பும் உனது பேரானந்தம்,
காலையின் உயிர் நாடியை
வேகப்படுத்தி வியக்க வைப்பதும்,
எல்லா அழகுகளின் வித்துக்களையும்
விரைவுபடுத்தி முளைவிடச் செய்வதும்,
ஆகாயங்களைக் கைப்பற்றுவதும்,
பூமியின் இதய மகிழ்ச்சி வேர்களின்
செழுமையைத் தோற்றுவிப்பதில்
வெற்றிபெறுவதும்,
இவையா உனது ரகசியம்?
வசந்த காலமே, ஓ வசந்த காலமே—

படிப்பகம்

www.padippakam.com

## மனுஷ்ய புத்திரன்

# மெஸ்மெரிசம்

கவனி
கண்களைக் கவனி.

இரக்கப் படாதே;
சோர்வடையாதே;

என்ன நினைப்பார்களோ
என்று தலை தாழ்த்தாதே.
கண்களைக் கவனி.

எத்தனை முறைதான்
தங்களிடமிருந்து
பிடுங்கிப் பிடுங்கி
எறிவார்களென்று
பார்ப்போம்.

இமையாது
கழுத்தைத் திருப்பாது
கரு விழி மையத்தில்
கதிர்களைப் பாய்ச்சு.

ஆண்களோ
பெண்களோ
அந்நியரோ
நம்மவரோ
முகங்களா முக்கியம்?

கண்களைக் கவ்வு.

பயப்படுகிறார்கள்
கண்களிடம்.

தம் சொந்தக் கண்களுக்கே
பயப்படுகிறார்கள்.

பார்வைகள் எங்கெங்கோ...

பேச்சுகள் எதனெதனிடமோ.

பொய் தியானங்களின்
இமைத் திரைகள்
தப்பித் தவறி
மோதும் பார்வைகள்
சிதறி ஒடுங்கி
புகலாய் ஓர் அந்நியம் தேடும்.

நம்பிக்கையின்மையா?
பிடிபட்டு விடும்
தலைமறை வாழ்வச்சமா?

பதிலுக்கு
தம்மைப்
பார்க்காததை மட்டும்
பார்ப்பதன் திட்டம் என்ன?

அழகானவை
என் கண்களைப் போலவே
உன் கண்களும்.

குரூரங்கள்
இனிமைகள்
பரிதாபங்கள்
சாகசங்கள்
ஒன்றாய் கலங்கிவிட்ட அழகு

அதன் சின்னப் பள்ளங்களுள்
அருவியாய் விழும்
பிரபஞ்சம்.

பள்ளங்கள் வழிய
திக்கெங்கும் கிளைக்கும்
நதிகள்.

ஒரு மிடறு அள்ளிப் பருகத்
துணிவற்ற
தாகத்தால் வெறியுண்ட
விலங்குகளின் இடப்
பெயர்ச்சியோ
முடிவில்லாமல்.

இங்கே வா
என் விருந்தாளியே!
ஒரு வார்த்தை
பேச வேண்டாம்.

எல்லா அறிமுகங்களும்
எதையும் சொல்லாதவை.

குறுகுறுப்பின்றி வெறுமனே
பார்த்துக் கொண்டிருப்போம்
சுடர்கள் பொருத.

கண்கள் எரிந்து, கசிந்து,
கண்ணீர் மல்கும் வரை,
நம் புராதன மொழி,
நம் புராதன இதயம்,
மீளும் வரை.

படிப்பகம்

www.padippakam.com

# பீடி

## கோபிகிருஷ்ணன்

*(மீறல் வகைமையில் சிறுகதை)*

பீடி ஒரு கலாச்சாரக் குறியீடு. கலாச்சாரப் பாதுகாவலர்கள் மன்னிக்காவிட்டால் பாதகமில்லை.

சூழலியல்வாதிகள் கண்டனம் தெரிவிக்கவும். ஓஸோன் படலத்தில் பொத்தல். மனப்படலத்தில் ஏராளமான பொத்தல்கள். வாயில் சதா நிகோடினை நாடும் விழைவு.

புகைத்தலின் உதயம்: 16-10-'68 இரவு. காரணம் அந்தரங்கமானது. என் மீது நானே அருவருப்பு கொள்ள சுயமாக ஏற்படுத்திக் கொண்ட களங்கம். புகைத்தலின் மறைவு: என் மறைவு நாள். என் பிணத்துக்கு எரியூட்டும் போது ஒரு கட்டு சந்திரிகா பீடியை என் அருகில் வையுங்கள். என் இறுதி ஆசை இது மட்டும்.

1975. தாம்பரத்தில் ஒரு ராத்தங்கலுக்கு ஒரு விடுதியில் அறை எடுத்து தங்கியிருந்தேன். படுக்கையில் கிடந்த வண்ணம் புகைத்துக் கொண்டிருந்தேன். யதேச்சையாகக் கூரையைப் பார்த்ததில் 'உங்க சாம்பலை எங்கு அனுப்ப?' என்ற ஆங்கில வாசகம் தென்பட்டது. இருப்பினும் புகைத்தல் அமைதியாகத் தொடர்ந்தது.

பீடி ஒரு குறியீடு. சாதா சிக்ரெட் நடுத்தர வர்க்க பொதுமைக் குறியீடு. ஃபில்டர் சிகரெட் ஒயிலின் குறியீடு. ஃபில்டர் கிங் சிகரெட் கூடுதல் ஒயிலின் குறியீடு: சமூக அந்தஸ்தின் குறியீடு. மேலைநாட்டு சிகரெட் Xenophilia மோகம்.

பீடி கீழ் மத்திய தர வகுப்பினரின் ரகசிய நான்கு சுவர் நுகர்வு; வெளியில் புகைப்பதோ சாதா சிகரெட். பீடி சேரி வாழ் குடிமகன்களின் அன்றாட பகிரங்க நுகர்வு.

பீடி: பெரிய நிறுவன மோட்டார் வாகன ஓட்டிகள், பணக்கார முதலாளிகள் / நிர்வாகிகள் மீது நிகழ்த்தும் மறுப்புத் தெரிவித்தல்- புரட்சி. என் நிறுவன வாகன ஓட்டி எஸ். கே. நாயருடன் பீடிப் பரிமாற்றம். நிர்வாகி ஒருத்தியின் கோபாவேசப் பார்வை. ஆண்டான்—அடிமை முறையைப் பீடியின் நெருப்புத்துகள் எரிக்கும் உன்னதம். நிர்வாகிக்கு நெருப்புக்காயம். பீடி எஸ்.கே. நாயரின் வெற்றிச் சின்னம். என்னுடைய ஸ்தாபிதச் சின்னமும் கூட. அநேகமாக 'மெமோ' வரலாம். வேலை போகலாம். மயிராப் போச்சு இந்த இழவு வேலை.

புகைக் குழாய். வெளிநாடு சென்று திரும்பிய கிருத்துவத் தோழியின் நேசப் பரிசளிப்பு. மனைவி கும்பிடும் சாமிப் படத்தின் அருகே புனிதமே உருவான அக்குழாய் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. புனிதம் சாமியில் இல்லை. புகைக் குழாயில் நிறைய இருக்கிறது. மென் உணர்வில் இருக்கிறது. உண்மையான தோழமையில் இருக்கிறது. இந்தப் புகைக் குழாய் தெய்வீகத்தின் குறியீடு. மனிதத்தின் சின்னம்.

புகைக்குழாயின் பிற அர்த்தங்கள்: அந்தஸ்து, கவன ஈர்ப்பு உத்தி, தீமைக் குறைவு.

படிப்பகம்

www.padippakam.com



புகைக் குழாய் மார்க்கெட் ஆராய்ச்சி 'சர்வே'யில் ஒரு பிரபல எழுத்தாளரின் பச்சையான பொய். பொய்யரின் புத்தகங்களைப் பிறகு தொடவேயில்லை. எழுத்தின் உன்னதம் எழுதுபவரின் ஆளுமையில் பிரதிபலிக்கப் படாத பொழுது அவருடைய எழுத்தை நிராகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம். இது என்னுடைய சித்தாந்தம் மட்டும். சுய கோட்பாடுகளில் என் நசிவைக் காணமுடிகிறது. என் சவக் குழியை நானே தோண்டிக் கொண்டு விட்டேன். உங்களுக்கு சிரமம் வைப்பதில் விருப்பம் இல்லை. நசிவடைந்த நான் நிம்மதியாகத்தான் சாவேன், என் தனித்துவ நசிவின் புனிதத்தைக் கடைசி வரை காப்பாற்றிக் கொண்டு. நீங்கள் என்னிடமிருந்து வேறு படுங்கள். உங்கள மேன்மை பெற்ற விலகலின் மீதும் வேறு படுதலின் மீதும் என் தோழமை பரவும். என் முகத்தில் எச்சில் துப்பினால் உங்கள் வெளிப்பாட்டுக்கு நன்றி சொல்லத் தவறமாட்டேன். தோழமை மிக மிக அவசியம்.

உங்கள் சிகரெட்டை நீங்களே உருட்டிக் கொள்ளுங்கள். **Roll your own cigarette.** விமரிசையான சடங்கு. சுத்தமான, பிற நச்சுப் பொருள் எதையும் யாரும் கலக்க முடியாத சுத்தமான புகையிலைத் துகள்கள் அடங்கிய நேர்த்தியான பை. சிறப்புக் காகிதம். பல பொருள்கள் சிறப்பு அங்காடிகளில் மட்டும் கிடைக்கும். சுத்தமான புகையிலைத் துகள்கள்தாம். கலப்பு என்ற சந்தேகம் தீர்ந்தது. சந்தேகம் அடிப்படையில் இருப்பதால் இது Paranoid மனச்சிதைவு நோயின் ஒரு பூடகமான குறியீடு. சொந்த சிகரெட் தயாரித்தல் ஒரு நீண்ட சடங்கு. நடத்தைக் கோளாறு. Neuroticism. நீங்கள் பணக்காரர்கள். உங்கள் சிகரெட்டைத் தூய்மையுடன் சுற்றிக் கொள்ள உங்கள் மோதிர விரல் கைகளில் நேரம் ஏராளமாக கனத்துக்கிடக்கிறது. அனுபவியுங்கள் உங்கள் நோய்க் குறியை. குறுக்கே நான் நிச்சயம் இல்லை. திணிக்கப்படும் அலுவலக நெறிமுறைகள்: சடங்குகள். அங்கப்பிரதட்சணம் சடங்கு. மீண்டும் Neuroticism.

பீடி உழைப்பாளிகளின் சின்னம். எழும்பூர் ரயில்நிலைய வெளிப்புறத்தில் ஓர் ஏழை விவசாயி பீடியைப் புகைத்த வண்ணம் கலப்பையைத் தோளில் ஏந்தி நிற்கிறார். விளம்பர உத்திதான். விவசாயியின் கோவணமும் தோலின் சுருக்கங்களும் உண்மையான பாரதச் சின்னங்கள். அவர் நிலைக்கு நானும் காரணம். குற்ற உணர்வு. ஒரு சந்திரிகாவைப் பற்ற வைத்துக் கொள்கிறேன். பீடி பாட்டாளிகளின் சின்னம்.

...மடத்தில் பீடி தடுக்கப்பட்டிருக்கிறது. திருட்டுத் 'தம்' முக்குத் தண்டனையாக ஒரு சமையலாள் மடத்தைவிட்டு நீக்கம் பெறுகிறார். மடத்துக்கு எதிராக இயங்கும் பீடி ஒரு மத மறுப்புச் சின்னம். அங்கு ஓ.பி. நையார் ஆனந்தமாக, பகிரங்கமாக பீடி பிடிக்கிறார் இசை வெள்ளத்தில் மிதந்துகொண்டு. தென்னகம் வேறு, வட அகம் வேறு. என் முன்னாள் ஐரிஷ் நண்பரும் பீடி பிடிப்பார். அவரிடம் சர்வகால

படிப்பகம்

www.padippakam.com



உற்சாகம். பீடியினாலா? ஆளு மையினாலா? இதுவரை புரியவில்லை.

வார்தா சேவாக் கிராமில் சொந்தப் பிரச்சினைகளுக்குத் தாற்காலிக விடுமுறையைப் பறைசாற்றிவிட்டு நண்பர் ஒருவரின் அறையில் தஞ்சம். ஒரு மாத நிம்மதியான பீடி பிடிப்பு. வடக்கில் பீடி சர்வ சாதாரணம். அப்பொழுது பவுனாரில் வினோபா பாபேவுக்கு ஜலதோஷம். பத்திரிகைச் செய்தி 1974. சாந்தி, சாந்தி, சாந்தி. ஜலதோஷம் குறைய வில்லை. கடவுளும் உச்சாடனங் களும் தீர்வு அல்ல. உண்மையான தீர்வு என்பது இன்னும் குழப்பமாகவே இருந்து வருகிறது. நவீன மருத்துவமும் ஒரு தாற்காலிக விடுவிப்புதான். நிரந்தரத் தீர்வு அல்ல. பீடியும் தீர்வு அல்லதான்.

பழங்குடி மக்கள்: அரிசி 'பியர்', சாராயம், சப்பி, ஜிஞ்சர். கலக்கல்: சேரி வாழ் ஆத்மாக்கள். விஸ்கி, ஜின் பற்றி வேறு இடத்தில் பேசுவோம். ஜின்காரப் பணக்காரர்கள் நமக்குத் தேவையில்லை.

1972, லாரி ஓட்டுநர் தணிகாசலத்தின் திருமணத்துக்கு முன்னாள் மருத்துவ நண்பரும் சமூகத்தை ஏய்த்துப் பிழைத்து வந்த முன்னாள் நண்பரும் சென்றிருந்தோம். கிராமத்தில் சாராயக் காய்ச்சலில், உபயோகப்படுத்தப்பட்ட பாட்டிரிகளைப் போட்டிருந்தார்கள். ஒரு ராத்தங்கல். அடுத்தநாள் நுங்கு வெட்டித் தந்தார்கள். அபரிமிதமாக முப்பது சாப்பிட்டேன். கிறக்கமாக இருந்தது. இரண்டு தினம் கழித்து விமான ஓட்டி நண்பர் எபிநைஸரின் இறப்புச் செய்தி வந்தது. ஒரு கட்டு பீடி துக்கத்தை ஓரளவு தணித்தது. தொண்டையில் வலி. 'லாஸஞ்ஜஸ்' போட்டும் பிரயோசனமில்லை பொறுத்துக் கொண்டேன். பீடி உணர்வுகளின் சின்னம். ஒரு வடிகால். ஓர் இரங்கல் சின்னம்.

1976 லீலாவிடம் கேட்டேன். "பி. யு. ஸி படித்திருக்கிறாயே? வேலை செய்யக் கூடாதா? தொழிலை விட்டு விடேன்" என்றேன். "மாதம் இரண்டாயிரத்தை ஒரு பி .யு. ஸி சம்பாதித்துத் தராது. நான் இப்படியே இருக்கிறேன். நீ அழகாகவே உபன்யாசம் செய்கிறாய். பக்கத்துக் கோவில் தர்மகர்த்தா என் வாடிக்கையாளர்தான். உன் உபன்யாசத்துக்கு அந்தக் கோவிலில் ஏற்பாடு செய்யட்டுமா?" என்று கேட்டாள். நான் மவுனமாக இருந்தேன். "வேண்டுமானால் உன் போன்ற நண்பர்களுக்கு நான் இலவசம்; ஆசையானால் அனுபவித்துக் கொள்" என்று தலையை வருட ஆரம்பித்தாள். அப்பொழுது இளவயது. உடல் தொடு உணர்ச்சியைக் கிரகித்துக் கொள்ளு முன் நேசக் கரம் நீட்டிக் கைகுலுக்கி அன்புடன் விடை பெற்றேன். என் மீது எனக்கே பயம் வர ஆரம்பித்தது. நானும் பிறரைப் போல லீலாவிடம் ... இல்லை என்னால் முடியாது. லீலா என் உற்ற தோழி. தோழமையை இழிவுபடுத்த என்னால் முடியாது. நான் மனிதன். ஒருக்கால் கோளாறு பிடித்த மனிதன். ஆனால் நிச்சயம் மனிதன். வெளியில் வந்து பீடி ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டேன். பீடி உணர்வின் சின்னம். ஒரு வடிகால். உளைச்சலைத் தணிக்கும் அரு மருந்து. லீலா

படிப்பகம்

www.padippakam.com



வின் வீட்டுக்குப் பிறகு நான் போகவில்லை. என்னைப் பற்றிய பயமும் லீலாவின் எண்ணமும் வந்த போது கைவசம் பீடி இருந்தது. சென்னையம் பதி பீடி துணை. ஓம் பீடி நமஹ. சமூகக் கோளாறுக்கு லீலாவைச் சொல்லிப் பயனில்லை Yama, the Pit அல்லது Yama, the Hell- hcle. Kuprin, Alexander.

பீடி நெகிழ்வின் சின்னம். பீடி உடையாமலிருக்க பீடிக் கட்டை முதலில் உள்ளங்கைகளுக்கு நடுவில் வைத்து உருட்ட வேண்டும். நெகிழ்வு நிகழ்ந்த பின்னரே பீடியை உடைக்காமல் உருவ முடியும். பீடி நிச்சயம் நெகிழ்வின் சின்னம். நெகிழ்வு அன்பு. அன்பே தெய்வம். பீடியே அன்பு. பீடியே தெய்வம். பொங்கலோ பொங்கல். பீடியே பீடி. வாழ்க இந்த நெகிழ்வுச் சின்னம்.

பீடி விளம்பரம். ராகினி படம். சிறு வயது. மதுரை சுடி சினிமா விளம்பர 'ஸ்லைட்'

வடக்கத்திய கஞ்சாப் பிரசாதம். ஓம் ந-ம-ச்-சி-வா-ய.

பீடி-

சேரி—

விழிப்புணர்வுக் கூட்டம்-

சமூகப் பணிச் சடங்கு-

சுட்டிக் காட்டியதில் மனத் தாங்கல்-

வாழத் தெரியாதவன் என்ற முத்திரை.

பீடி-

புகை-

மறத்தல்.

சிகார் மதிய உணவின் பிறகு புகைத்தல். பழைய தோழர்களின் நினைவு. எல்லாம் ஓய்ந்து கீழ் மத்தியதர வாழ்க்கை. சிகார் மறைந்து பீடி. வேறு வழியில்லை.

சுருட்டு-

தாத்தா-

பீடி-

நெஞ்சுவலி-

இதய நோயா?

இதய அலைப்படம் சீராக இருந்தது. Electro-ecograph சரியாக இருந்தது. Stress test இயந்திரக் கோளாறு கிழ்ப்பாக்கம் பொது மருத்துவமனையில் சரி ஆக ஒரு மாத காலம் பிடிக்கும். இதயம் சரி ஆக இருந்தது. நெஞ்சுவலி உணர்சிகள் உருவாக்கிய மன நோய். தீவிர சுய ஆலோசனை. நெஞ்சுவலியின் மறைவு. மிக சமீபத்திய நிகழ்வு. 1991.

நவீன மருத்துவ வாய்க்குழுவிகள் ஒரு பசப்பல் வாயில் தூர்கந்தம் சர்வகாலப் பிரச்சினை. நண்பர்கள் சற்றுத் தூர இருந்தே பேசுகிறார்கள். பீடி மரியாதையான இடை வெளியின் சின்னம்.

சுதந்திரத் தொடர்பு படுத்தல் உத்தி. சிக்மன்ட் ஃப்ராய்ட். தூண்டுதல் வார்த்தை கத்தி. பதில் வார்த்தை கொலை. ஏன் காய்கறி என்ற வார்த்தை வரவில்லை? அகிம்சை ஓர் உண்மையின்மை. வன்முறை இயல்பான ஒரு மனிதத்தன்மை. புண்பாடு வன்முறையை அமுக்கிவிடுகிறது. பீடி அடக்கி ஆளும் அப்பாவுக்கு எதிரான ஒரு புரட்சி. வன்செயல். அதிகார வர்க்கத்துக்கு எதிரான ஒரு குறியீடு.

பீடி ஒரு சமூகக் குறியீடு. புகையிலையை நியாயப் படுத்தும் ஒரு மூடத்தனம்தான். ஆனாலும் வாழ்க பீடி. குறியீடு ஒழியச் சாத்தியமில்லை.

படிப்பகம்

www.padippakam.com

**யூமா. வாசுகி**

## வாழ்க்கையைக் கொண்டுவரச் சென்றவன்

அசுரக் காற்றில்
சன்னல் கதவுகள்
வெடிப்பது போலத் துடிக்கின்றன.
கண்ணாடிக்கு அப்புறம்
கூந்தலைச் சுழற்றி
வளையும் தென்னை.
அறைக்குள் நுழையும்
சாரலையும் மின்னலையும்
வாயிலிலேயே நின்று
எதிர்கொள்கிறேன்.
பல நூறு மைல்களுக்கப்பால்
அங்கே.....
உன் தனித்த இரவும்
இப்படித்தானா அம்மா...
இடிச் சத்தத்தில் நடுங்காதே.
கீற்று விலகிய இடங்களில்
பாத்திரங்களை வைத்து
நனைந்துபோன உன்
படுக்கையை ஒதுக்கி
சூன்யம் பார்த்துத் திகைத்திருப்பதாய்ப்
படம் விரிகிறது.
மழையோடு
என்னை நினைத்துக்கொள் அம்மா.
உனைப் பிரிந்த வருடங்களாய்
இங்கே நான்
பள்ளம் வெட்டிக்கொண்டிருந்தேன்.
சருகுகளால் மேற்புரத்தில்
குழியை மறைத்தாயிற்று...
எப்போதாவது
இவ் வழியே வரும் வாழ்க்கை
இடறி இதில் விழும்போது
வசப்படுத்தி விடத்தான் காத்திருக்கிறேன்.
அம்மா...
என்னை நினைத்துக் கொள்.



படிப்பகம்

www.padippakam.com

தொடர் 6

## வல்லிக்கண்ணன்

# நினைவுத் தடங்கள்

நான் சென்னைக்கு வருவதற்கு முன்னர் கண்டிருந்த பெயர் பெற்ற எழுத்தாளர்களை நினைவு கூர்ந்தேன். டி. கே. சி. ரா. பி. சேதுப்பிள்ளை, தி. ஜ. ர. ஆகிய சிலரே அவர்கள். சென்னையில் நவசக்தி அலுவலகத்தில் வ. ரா.வை சந்திக்க முடிந்தது.

'இன்னும் பலபேரை பார்த்துவிடலாம். கிராம ஊழியன் மலருக்கு விஷய தானம் பெற்ற மாதிரியும் இருக்கும்' என்று திருலோக சீதாராம் சொன்னார்.

அப்போது அவருக்கு 27 வயது இருக்கும். உற்சாகமாக இருந்தார். அனுபவசாலி. முதலில் விழுப்புரத்தில் இராம. சடகோபன் நடத்தி வந்த 'தியாகி' என்ற சிறு பத்திரிகையில் உதவியாளராகப் பணிபுரிந்தார். சீக்கிரமே சொந்தமாக ஒரு பத்திரிகை தொடங்கினார். 'ஆற்காடு தூதன்' — ஆற்காட் ஹெரால்ட் — என்று பெயர் அதற்கு. அது ரொம்ப காலம் நடக்கவில்லை.

அவர் பாரதி பக்தர். பாரதி பாடல்கள் அனைத்தும் அவருக்கு மனப்பாடம். எடுப்பான குரலில் அவற்றைப் பாடிப் பலரையும் வசீகரிப்பார். வள்ளலார் பாடல்களையும் பயின்றிருந்தார். வள்ளலார், பாரதி குறித்துப் பல இடங்களிலும் சொற்பொழிவு நிகழ்த்தி, சில வட்டாரங்களில் பெயர் பெற்றிருந்தார்.

அவரே கவிதைகளும் எழுதலானார். திருவையாறு லோகநாத ஐயர் மகன் சீதாராமன் என்பதை திருலோக சீதாராம் என்று ஆக்கிக் கொண்டார். அந்தப் பெயர் கவனத்தைக் கவர்வதாகவும் புதுமையாகவும் அமைந்தது. 'பால பாரதம்' என்றொரு இலக்கிய இதழ் தொடங்கி நடத்தினார். அதுவும் வெகுகாலம் நடைபெறவில்லை.

அவருக்கு திருச்சி மாவட்டம் துறையூரில் கல்யாணம் ஆகியிருந்தது. அந்தச் சுற்றுப்புறத்தில் அவரது பேச்சுத் திறத்தினால் அவர் கவனிப்பு பெற்றிருந்தார். ஆகவே, 'கிராம ஊழியன்' என்ற அரசியல் வார இதழின் ஆசிரியர் பூரணம் பிள்ளை மரணம் அடைந்ததும், திருலோகசீதாராம் அதன் ஆசிரியராக்கப் பட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



பிறகு, திருச்சியிலிருந்து வந்து கொண்டிருந்த 'கலாமோகினி' என்ற மறுமலர்ச்சி இலக்கிய மாதம் இருமுறைப் பத்திரிகை போல் நடத்தலாம் என்று 'கிராம ஊழியனை'யும் இலக்கிய இதழாக மாற்றினார்.

எனக்கு அப்போது வயது 23. சென்னையையும் சென்னை எழுத்தாளர்களையும் எனக்கு அறிமுகம் செய்யக் கூடிய நல்ல துணையாகச் சேர்ந்தார் அவர்.

அந்நாட்களில் சென்னை நகரில் டிராம் வண்டிகள் ஓடிக் கொண்டிருந்தன. அதிக பஸ்கள் கிடையா. ஆட்டோ ரிக்ஷாக்கள் தலைகாட்டியிராத காலம். மனிதர் இழுக்கும் ரிக்ஷாக்கள் மிகுதி. நாங்கள் இவற்றில் எல்லாம் பிரயாணம் செய்தும், அதிகமாக நடந்தும் சென்னை மாநகரில் சுற்றினோம்.

மயிலாப்பூரில், அலர்மேல்மங்காபுரம் பகுதியில் வசித்த கா. சி. வேங்கடரமணியை ஒரு நாள் கண்டோம்.

வேங்கடரமணி ஆங்கிலத்திலும் தமிழிலும் நூல்கள் எழுதிப் பெயர் பெற்றிருந்த மூத்த எழுத்தாளர். தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த வக்கீல். இந்தியாவுக்கு விமோசனம் அதன் கிராமங்களின் முன்னேற்றத்தையும் வளத்தையும் சார்ந்தே அமைய முடியும் என்ற நம்பிக்கை உடையவர். எனவே காந்தீயக் கொள்கைகளில் பற்றுதல் கொண்டிருந்தார். இவருடைய ஆங்கில நூல்கள் இங்கிலாந்தில் பிரசுரம் பெற்றவை.

'பேப்பர் போட்'ஸ், 'ஆன் தி ஸேண்ட் ட்யூன்ஸ்', 'நெக்ஸ்ட் ரங் ஆஃப் தி லேடர்' போன்ற அவருடைய ஆங்கில நூல்கள் பிரசித்தமானவை.

அவற்றை நான் 1939இல் பரமக்குடியில், 'சர்க்கார் விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர் ஆபீஸ்' குமாஸ்தாவாக வேலை பார்த்த போதே படித்திருக்கிறேன். அதற்கு முன்பே, பள்ளிப் பருவத்திலேயே, கா. சி. வேங்கடரமணியின் எழுத்துக்கள் எனக்கு அறிமுகமாகியிருந்தன.

உயர்நிலைப் பள்ளி வகுப்புகளின் தமிழ்ப் பாட நூல்களில் அவருடைய கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன. வேங்கடரமணியின் பெயர் பெற்ற நாவல் 'முருகன் ஓர் உழவன்' அக்காலத்தில் கல்லூரி வகுப்புகளுக்குத் துணைப்பாட நூலாக இருந்தது. ஒரு மாணவனிடமிருந்த அந்நாவலை நான் உணவையும் மறந்து உற்சாகமாகப் படித்து முடித்தது நினைவில் அழுத்தமாய்ப் பதிந்துள்ளது.

அவர் சென்னையில் 'பாரதமணி' என்ற பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்தார். கிராம சீர்திருத்தமும் கிராம மக்களின்

படிப்பகம்

www.padippakam.com



முன்னேற்றமும் அதன் இலட்சிய நோக்கமாக இருந்தது. 'ஹிந்து' ஆங்கில நாளேட்டின் ஆசிரியர் குழுவில் வெகுகாலம் பணியாற்றிய பேரறிஞர் ரகுநாதன் அதில் சிந்தனைக் கட்டுரைகளும் கதைகளும் நாடகங்களும் எழுதிக் கொண்டிருந்தார் ரசிகன் என்ற பெயரில். (பின்னர் 1960களில், அவற்றில் பல 'ரசிகன் கதைகள்' 'ரசிகன் நாடகங்கள்' என்ற புத்தகங்களாக வெளிவந்து இலக்கியப் பிரியர்களின் பாராட்டுகளைப் பெற்றன.)

வேங்கடரமணி மிக மெலிந்து காணப்பட்டார். ஒய்ந்து ஈசிச்சேரில் சாய்ந்திருந்தார். பத்திரிகை நடத்துவதிலுள்ள சிரமங்களைப் பற்றியும், அதற்கு வரவேற்பு இல்லாதது குறித்தும் சொன்னார். 'இருந்தாலும் சொல்ல வேண்டிய விஷயங்களை சொல்லித்தானே ஆக வேண்டும்? அதற்காக பத்திரிகையை விடாது நடத்த வேண்டியது அவசியமாகிறது' என்றார்.

அவருடன் பேசி முடித்து வெளியே வந்ததும், 'கிராம முன்னேற்றம் பற்றி மட்டும்மே எழுதிக் கொண்டிருந்தால், அது எப்படி எடுபடும்?' என்று திருலோகசீதாராம் குறிப்பிட்டார்.

—தேனடையின் அறைகள் போல் கிராமங்களால் நிறையப் பெற்றது இந்தியா. தேனடையில் கறையான் பற்றிக் கொண்டது போல இந்தியக் கிராமங்களையும் பலவிதமான கேடுகள் புகுந்து சீர்குலைத்துக் கொண்டிருக்கின்றன.

—புனிதமான தேன் உள்ள தும்பைப் பூக்களை நாடுவதை விடுத்து தேனீக்கள் சாரமற்ற புளியம் பூக்களைச் சுற்றி அலைவது போல, மக்களும் ஆரோக்கியம் தரக் கூடிய கிராமங்களை விட்டு நகரங்களைத் தேடி ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

1934-35 'ஐந்தாம் பாரம்' தமிழ்ப் பாட நூலில் வந்த வேங்கடரமணியின் கட்டுரையில் படித்து என் மனசில் பதிந்திருந்த இக் கூற்றுகள் என் நினைவில் எழுந்தன.

தீவிரமாக கிராமப் பற்றுதல் கொண்டு அது பற்றியே சிந்தித்தும் எழுதியும் வருகிற வேங்கடரமணி கூட வசிப்பதற்கு வசதியான இடம் சென்னை மாநகரம் என்றுதானே இங்கு வந்து தங்கியிருக்கிறார் என்று என் மனக்குறளி குரல் கொடுத்தது.


—வளரும்.



படிப்பகம்

www.padippakam.com

## என் ஜன்னலுக்கு வெளியே...



# இறைவனும் இலக்கியமும்

**மாலன்**

*'மொழி அகதிகள் பிடியில் தமிழ் இலக்கியமும் பத்திரிகைகளும்' என்னும் நம் கட்டுரையில் நாம் சொல்லத் தொடங்கியதையும் மேலும் சொல்ல விழைவதையும் கூட திரு மாலன் அவர்கள் 19-6-'93 நாளிட்ட தினமணி சுடரில் இக்கட்டுரையில் வெளிப்படுத்துகிறார் அழுத்தமாகவும் அப்பட்டமாகவும் வெளிப்படும் அவரின் நேர்மையை மதிப்பதோடு 'இந்தக் கடைகால் எந்தக் கட்டிடத்திற்கானது' என்று இப்போது விளங்காவிடினும் நாம் எழுப்பிய நியாயத்திற்கான வாதமாக வெகு நன்றியுடன் எடுத்தாள்கிறோம்.*

என் ஜன்னலுக்கு வெளியே ஓர் ஊர்வலம் போகிறது எண்ணிக்கையில் அதிகம் பேர் இல்லை. ஆனாலும் அவர்களது முழக்கங்கள் உரத்தும் உறுதியோடும் ஒலிக்கின்றன.

அவர்களது வாதங்களில் நியாயம் இருக்கிறது. ஆனால் அவற்றை எடுத்துச் சொல்லும் வார்த்தைகளிலோ நெருப்பு ஜொலிக்கிறது. அவை அமைப்பை மாற்ற எழும் கலகக் குரல்களா? அல்லது வெறும் அதிர்ச்சி மதிப்பிற்காக உதிர்க்கப்படும் ஆர்ப்பாட்ட வார்த்தைகளா?

அவர்கள் படிக்கவும் உழைக்கவும் இட ஒதுக்கீடு கேட்கிறார்கள். அது அவர்களுக்குத் தரப்படும் சலுகை அல்ல. முந்தையத் தலைமுறையின் முறையற்ற நீதிக்கு இன்றைக்குச் செலுத்தப்படும் இழப்பீடு. அவர்கள் ஆலயங்களின் கருவறைக்குள் நுழைய ஆசை கொள்கிறார்கள். அது பக்தியினால் அல்ல. தீண்டத்தகாதவர்கள் என்று எழுதப்பட்ட தீர்ப்பைத் திருத்துவதற்காக.

அவர்கள் இலக்கியங்களைக் கிழித்தெறிகிறார்கள். அது எழுத்துக் கலை மீதிருக்கிற வெறுப்பினாலே அல்ல. அவை நடுநிலை தவறியும் நியாயம் கெட்டும் இருப்பதால்.

அவர்களது வாதங்களைப் பரிசீலிக்காமல், செயல்களை மாத்திரமே பார்க்கிறவர்கள், அவர்கள் முரட்டுத்தனமாகப் பேசுவதாகவும், முறை தவறி நடப்பதாகவும் எண்ணி முகம் சுளிக்கிறார்கள்; அல்லது மோத முற்படுகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



ஆண்டவன் எல்லா இடத்திலும் இருப்பதாக நம்புவதுதான் ஆத்திகம். கோயிலுக்குள் மட்டுமல்ல குடிசைக்குள்ளும் கூடவே இருப்பவன்தான் கடவுள். குடிசைக்குள் இருப்பவன் கோயிலுக்குள் வந்ததால் ஆண்டவன் தீட்டுப்பட்டுவிட்டதாகச் சொல்வது ஆத்திகத்தை மட்டுமல்ல, அந்த ஆண்டவனையே மறுப்பதாகாதா?

இந்த தேசத்தின் எல்லா இடங்களிலும் ஆட்சி செலுத்தும் அதிகாரமுடையது அரசியல் சட்டம். காஷ்மீருக்கு அதில் விலக்குண்டு, கருவறைகளுக்கு அதில் விலக்கில்லை. அரசியல் சட்டம் அறுதியிட்டுச் சொல்லும் குற்றங்களில் ஒன்று தீண்டாமை. தேனீர் கடைகளில் அதைப் பின்பற்றினால் தண்டனை. ஆனால் தேவன் சன்னிதியில் அது பின்பற்றப்படுமானால் கண்டுகொள்ளப்படாது எனச் சொல்வது ஆண்டவனை மட்டுமல்ல அரசியல் சட்டத்தையும் மறுப்பதாகாதா?

கோபுரங்களை எழுப்பி நிறுத்த உழைப்புச் செல்வத்தைத் தந்தவர்களையும், கற்பனைக் கண்ணில் கடவுளைக் கண்டு அதை கல்லில் வடித்துத் தந்தவர்களையும் அருகில் அனுமதிக்க மறுப்பது அந்த உழைப்பில் உறைந்து நிற்கும் இறைவனையே எட்டி நிற்கச் சொல்வதாகாதா?

பரம நாத்திகனைக்கூட அவமானப் படுத்தாத இந்து மதம் பக்திமான்களுக்குள் பாரபட்சம் காட்டுவதா? அவனுக்கு விதிக்கப்பட்ட அனுஷ்டானங்களை அரைகுறையாய்ப் பின்பற்றும் அந்தணனைக்கூட பூசை செய்ய அனுமதிக்கும் ஆகம விதிகள் பக்தி நூல்களைக் கரதல பாடமாகக் கற்றறிந்த கிருபானந்த வாரியாரையோ குன்றக்குடி அடிகளையோ ஆலயத்தில் பூசை செய்ய ஏன் அனுமதிக்க மறுக்கிறது?

வேதியர் அல்லாத வேறு குலத்தவர்கள் காளியையோ மாரியையோ பூஜிக்கும் போது கறைபடுவதில்லை. ஆனால் அவர்கள் ரங்கநாதனையோ, ராஜராஜேஸ்வரியையோ அணுகும்போது மட்டும் ஆசாரம் கெட்டுவிட்டதாகச் சொல்வது, கடவுள் ஒருவரே. அவரே வெவ்வேறு வடிவங்களில் தோற்றம் தருகிறார் என்ற அடிப்படைச் சித்தாந்தத்தையே கறைப்படுத்துவதாகாதா?

நான் நம்பிக்கைகளைக் கேள்வி கேட்கவில்லை. ஆனால் நமது நடைமுறைகள் என்மீது வினாக்களையே வீசுகின்றன.

இந்தப் பாரபட்சத்தைத்தான் இலக்கியத்திலும் பார்க்கிறேன். இந்தியக் கதை மரபை வரித்துக்கொண்டு அதில் நவீன அரசியல் கலாசார விஷயங்களை விவாதிக்கும் பாரதியாரின் ''ஆறில் ஒரு பங்கை'' விமர்சகர்கள் தமிழின் முதல் நவீனச் சிறு

படிப்பகம்

www.padippakam.com



கதையாக அங்கீகரிக்கவில்லை. தாகூரின் கதையைத் தழுவி வ.வே.சு. அய்யர் எழுதிய 'குளத்தங்கரை அரசமரத்தை'யே இன்று வரை கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு, பாரதி ஆறில் ஒரு பங்கை தாழ்த்தப்பட்டவர்களுக்கு அர்ப் பணித்தவர், வ.வே.சு. அய்யர் வருணாசிரம தர்மத்தை வற்பு றுத்தியவர் என்பவை காரணமாக இருக்கக்கூடுமோ?

திருட்டுக் கதைகள் எழுதியதாக புதுமைப்பித்தன் மீது குற் றம் சாட்டும் விமர்சகர்கள், பணத்திற்காக கே.என்.எஸ். என்ற பெயரில் விகடன் பத்திரிகையில் ஏராளமான தழுவல் கதைகள் எழுதிய- பிரஞ்சு நாவலாசிரியர் பால்ஸெக்கின் நாவலைத் தழுவி சுதேசமித்திரனில் 'இரு சகோதரிகள்' எழுதிய- ஸலம்போ என்ற பிரஞ்சு நாவலைத் தழுவி சந்திரோதயம் பத்திரிகையில் மயன் என்ற புனைப்பெயரில் மாதவி என்ற நாவலை எழுதிய க.நா.சு. வைப் பற்றி வாயைத் திறப்பதில்லையே ஏன்?

அறுபதாண்டு காலத் திராவிட இயக்கம் ஒரு இலக்கியப் படைப்பைக்கூடத் தர இயலாது போனது என்று ஒரு மேல் தட்டு விமர்சகர் எழுதுகிறார். அப்படியானால், பாரதிதாசனின் படைப்புகளில் இலக்கியத் தரத்தோடு ஒருவரிகூடக் கிடையாதா? திராவிட இயக்கம் ஏற்படுத்திய தமிழ் உணர்வின் காரணமாகத் தோன்றிய வானம்பாடிகளில் கவிஞர் என்று எவருமில்லையா? தமிழ்நாட்டு முற்போக்கு கலைத் தோல்வி கண்டதாகவும் இந்த விமர்சகர் எழுதுகிறார். ஜெயகாந்தனிலிருந்து பா.ஜெயப்பிர காசம் வரை தமிழில் எழுதப்பட்ட படைப்புகள் எல்லாம் கலைத் தோல்வி கண்டவையா?

ராமாயணத்தை உரைநடையில் எழுதி ராஜாஜி சாகித்ய அகாதெமி பரிசு வாங்கினால் அது திறமைக்குக் கிடைத்த அங்கீ காரம். ஆனால் சமகால வாழ்க்கை பற்றி நாவல் எழுதி சமுத் திரம் பரிசு பெற்றால் அது 'இட ஒதுக்கீடா?'

விமர்சனம் என்ற பெயரில் தமிழிலக்கியத்தை எடைபோடும் தராசுகள் தடுமாற்றங்களையே தந்திருக்கின்றன. அவை தற் செயலா, அல்லது திட்டமிட்ட முயற்சியா என்பதை எளிதில் தீர்மானிக்க முடியாது. ஆனால் அவை இலக்கியத்திலும் இன் னொரு வகைத் தீண்டாமையை நடைமுறைப்படுத்தி வந்திருக் கின்றன.

நமது நடைமுறைகள் என்மீது வினாக்களையே வீசுகின்றன. விடைகளை எவர் சொன்னாலும் விளங்கிக்கொள்ள முயற்சிக்கி றேன்.

நன்றி: தினமணி சுடர்

படிப்பகம்

www.padippakam.com

இறந்துவிட்டதாகவே எல்லோரும்
நினைத்துவிட்டார்கள்.

நின்றது
ஆடிக்கொண்டிருந்த தொட்டிலன்றி
வேறொன்றுமில்லை.

அவர்கள் கணித்தது சரியோ தவறோ,
ஒன்றுமட்டும் நம்பும்படியாக உள்ளது:
கண்ணை மறந்து காதுகளை நேசிக்கும் தேசம்.

யாரோ, யாருடனோ சொல்லக் கேட்டிருக்கிறேன்
'முடிந்து போனான்; அவன் அழிந்து போனான்.'
நான் கேட்கத்தான் வேண்டும் அவர்களை:
முடிதலும் அழிதலும் எதைக் குறித்தவை?

எல்லாமே திருப்திகரமாக இருக்க,
எது இல்லாமல், எதன் துணையில்லாமல்
அழிந்தது எனப்படுவது?
நிற்கக் காணவில்லை பூமி.

அவர்கள் யோசனை செய்யட்டும்
இது இது, இன்ன இன்ன என்கிற
கோட்பாட்டு வரைமுறைகளை நம்பி
ஏமாந்தது போதுமென்று.
எதையும் நிற்க வைக்கவோ சுழல வைக்கவோ
முடியுமானால், சந்தேகமொன்றுமில்லை–
பூமியைக்கூட நிறுத்தி, சுழல வைக்கலாம்.

வார்த்தைகள்

கேக்குப்பட்டு செல்வா

## விக்ரமாதித்யன்

ஆல மரம் அரச மரம்
தூங்குமூஞ்சி மரம்
புன்னை மரம் புங்க மரம்
பூவரச மரம்
ஞானம் பிறந்த பின்னே
நானுமொரு மரமானேனே

ஃ

செய்த ஞாபகம்
செய்ய எண்ணம்
செய்தாக்கால்
சிந்தை யழியும்
சில்லென்று பூத்த
சிறுநெருஞ்சிக் காடு

ஃ

கதை கதையாம்
காரணமாம்
காரணத்திலொரு
பூரணமாம்
கதை காரண பூரணம்
படைத்து
கவிதை மட்டும் தீர்மானமாம்

ஃ

சும்மா
என்னை அலைக்கழிக்காதே
அம்மாதான்
சோறு போட வேண்டும்
எம்மா
எவ்வளவு பெரிசு இந்த உலகம்

படிப்பகம்

www.padippakam.com

# தாய் மொழியும் தந்தை மொழியும்

மா. அரங்கநாதன்

ஒரு தடவை சிதம்பரம் ராமலிங்க வள்ளலார் ஒரு சங்கராச்சாரியாரிடம் வாதம் நடத்தியபோது "சமஸ்கிருதம் எல்லா மொழிகளுக்கும் தாயாக இருக்கலாம், நீங்கள் சொல்வதுபடி. ஆனால் தமிழ் தந்தை" என்று சொல்லியிருக்கிறார்.

வள்ளலார் ஞானத்தால் சித்தர் பரம்பரையினர். தாய் மொழி தமிழ் மீது இயல்பாகவே இருந்த அன்பால் இப்படிச் சொல்லியிருக்க மாட்டார். ஒரு வேளை சொல்ல வேண்டிய அவசியம் வந்த போது சில கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருந்திருக்கும்.

ஆனால், ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் சொல்கிறார்: "நம் தாய் மொழி தமிழ். தந்தை மொழி சம்ஸ்யிருதம்" என்று. இது வள்ளலார்தம் மனோபாவத்தில் சொல்லப்பட்ட ஒன்றல்ல. ஊன்றிக் கவனிக்கும் போது 'இது யாருக்காகச் சொல்லப்பட்டது, எதற்காக?' என்ற சில விவரங்கள் தெரிகின்றன. அவரைப் பொறுத்தவரை இன்றைய சூழ்நிலையில் அவை பகிரங்கமாகப் பேச முடியாத அளவுக்கு இசகு பிசகானவை என்று தெரிய வரும்.

Max Plank இந் நூற்றாண்டின் ஆரம்ப கால கட்டத்தில் நமக்கருளிய 'Quantum Theory'ஐத் தெரிந்து கொண்ட உலகில் இன்னமும் நாடு, இனம், மொழி என்று பேசி வருவது குறுகிய மனப்பான்மை யென்று சொல்வது எளிது. ஆனாலும் சுதந்திர வுணர்வு என்பது எல்லோராலும் போற்றப்படும் நிலையாதலால் எல்லோருக்கும் தேவைதான்– துறவிக்கும்கூட.

மேலும், சங்கராச்சாரியார் சொன்னதால் அதைப் பற்றிப் பேசுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. வள்ளலார் நிலையிலிருந்து வாதமிட இப்போது யாருமில்லை. உலக வரலாறு, தத்துவம் பற்றிய அறிவைத் துணையாகக் கொண்டு சிலவற்றை எண்ணிப் பார்க்க முடிகிறது.

படிப்பகம்

www.padippakam.com



இலத்தீனையோ கிரேக்கத்தையோ தந்தை மொழி என்று ஐரோப்பிய இன மக்கள் கூறி வருவது போன்று இதைக் கருத முடியாது. 'ஆங்கிலம் எனது தாய் மொழி. இலத்தீன் தந்தை மொழி' என ஆங்கிலேயன் கூறினால் அது சரியாகவே இருக்கும் வரலாற்று ரீதியான தவறும் இல்லை. அதைப் போன்று 'குஜராத்தி தாய்மொழி. தந்தைமொழி சம்ஸ்கிருதம்' என்று கூறுவதும் வட நாட்டவர்க்கு சரியாக இருக்கலாம். ஆனால் தமிழ் நாட்டவருக்கு அது எவ்வாறு பாதிப்பை உண்டு பண்ணும் என்பது வேறு விஷயம்.

தமிழ் நாட்டிலுள்ள பார்ப்பனரைக் குறித்துத்தான் இவ்வாறு சொல்லப்பட்டது என்றால் அதுவும் வேறு விஷயம் தான். அப்படி இருந்தாலும் வரலாற்று ரீதியாகவும் இலக்கிய ரீதியாகவும் இன்னும் தெளிவாக்கப்பட வேண்டும்.

தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர் வடமொழியை தந்தை மொழி என்று ஒருநாளும் கூற மாட்டார். இது அதைப் பற்றியதல்ல. இன்று வடமொழியைப் பரிபாலித்து, நேசித்து, அது எங்கள் தந்தை மொழி என்று தமிழ் நாட்டில் ஒரு சாரார் கூறினால், அது அவர்கள் விருப்பம். இப்பொழுது வரலாற்று ரீதியாக அது சரிதானா என்று மட்டும் பார்ப்போம்.

○ ○ ● ○

நாட்டுப்பற்று என்றால்தான் என்ன? இனங்கள் ஒன்றிற்கு மேலுள்ள நாட்டில் எது நாட்டுப்பற்று? என்னுடைய கிராமத்தில் வசிக்கும் தகப்பனாருக்கு 'இந்தியா' என்கிற பெயரே தெரியாது. தூரத்தில் தென்படும் மலையும் ஓடுகிற ஆறும் ஊரைச் சுற்றி வளர்ந்திருக்கும் பயிர் வகைகளும்தாம் அவரது நாடு. அந்த இடத்தின் ஒவ்வோர் அசைவையும் ரசித்துக் கொண்டிருப்பவர். அவருக்குத் தெரிந்த ராமரும், கிருஷ்ணரும், காந்தியும், நேருவும் தமிழ்தான் பேசுவார்கள். புளிக் குழம்பு சாப்பிடும் ஆட்களாகத்தான் அவர்களைக் கருதிக் கொண்டிருக்கிறார். அந்தக் கிராமத்தை மட்டும் உயிராகக் கொண்டிருக்கும் கிழவர் நாட்டுப் பற்றுடையவராக மாட்டாரா?

நல்லது. வரலாறும் நில நூலும் படித்து, இந்த நாடு பல இனங்கள் கொண்ட நாடு; இந்தியா என்ற பெயரே மேல் நாட்டவர் கொடுத்தது; அது சிந்து நதி பாயும் பகுதியை மட்டுமே குறிக்கும்; இந்தியா என்ற சொல்லோ இந்து என்ற சொல்லோ பூங்குன்றன் முதல் வள்ளலார் வரை யாரும் பயன்படுத்தவில்லை. அது 1902 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்திய ரெகுலேட்டரி சட்ட மூலம் வந்தவொன்று. பாரதம் என்ற சொல்லைக்கூட பாரதிக்கு முன் யாரும் கையாள வில்லை. பாரத நாட்டின் தலைநகரம் எதுவென்றால் தெரி

படிப்பகம்

www.padippakam.com



யாது. பரத மன்னன் யார் என்பதே சந்தேகம். ஆரிய வர்த்தத்தின் எல்லை நர்மதா நதியோடு முடிகிறது என்றெல்லாம் தெரிந்து கொள்கிறோம்.

தெரிந்து கொண்டு, பின்னர் திடீரென, ஆரிய புத்திரன் — ஆரியன் என்றால்தான் அது மேம்பாடு; தமிழ் என்று சொல்லிவிட்டால் அது ஒருமைப்பாடு அல்ல என்று சொன்னால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? தமிழ் — தமிழன் என்று சொல்வதெல்லாம் பிரிவினைவாத அடிப்படை என்று கூற முன்வந்தால், ஆரிய— இந்தோ ஆரிய— இந்து என்று சொல்வதும் பிரிவினைவாத அடிப்படைதாம். இந்த நாட்டினரின் முன்னோர்கள் வேத கால ரிஷிகள்தாம் என்று கூறுவதும் பிரிவினை வாதம்தான்.

உண்மையைச் சொல்வதென்றால் 'ஆரிய' என்றாலே 'மிலேச்சர்' என்றல்லவா தமிழிலே பொருள்? வடமொழியில் 'உயர்ந்த' என்ற பொருளை வைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் நாம் வடமொழியாளரல்லவே. திண்டிவனம் பகுதியிலுள்ளவரை ஆரியர் என்றால் எப்படிப் பொருந்தும்? எனவே ஆரியர் என்று சொல்லுவோம்; தமிழர் என்று சொல்வது ஒருமைப்பாடாகாதென்றால் அது ஒருவகை பிரிவினைவாதம்.

இந்தப் பகுதி மக்களின் உணவு 'அரிசி'. உலகில் அரிசி பயிரிடுவதில் அதிக ஊக்கம் காட்டுவது இங்குதான். இந்த 'அரிசி' என்ற சொல்தான் கிரேக்கத்தில்'ஓர்சி' என்றும் ஆங்கிலத்தில் 'ரைஸ்' என்றும் மருவியுள்ளது என்பர்.

ஒருமைப்பாடு பேசும் இந்த நாட்டில் இதை இனி எப்படி வழங்குவார்கள்? அரிசி சாப்பிடாத மக்கள் அதை எப்படிச் சொல்கிறார்களோ அந்தச் சொல்லைத்தான் பயன்படுத்த வேண்டும். அதுதான் ஒருமைப்பாடு என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இதெல்லாம் ஒரு பழம்பெருங் குடி மக்களாகிய நமது கலாச்சாரத்தைப் பாதிப்பதாகாதா?

பின்னர் நமது சமயம். இந்து மதம் என்ற சொல்லை இப்பகுதியிலுள்ளோர் ஆங்கிலேயர் வரவுக்குப் பின்னரே அறிந்துள்ளனர். இங்குள்ள ஆகமங்கள் வேறு. வடக்கேயுள்ளவை வேறு. ஒருசில பிற்கால அரசர் ஆணைக்கு ஏற்ப வடமொழி மந்திரங்கள் ஏற்பட்டனவே யொழிய (அந்த அரசர்களும் வடபுலத்துத் தொந்தம் கொண்டாடியவர்தாம்) தமிழ் மொழியைத் தவிர சமயத்திற்கும் தெய்வத்திற்கும் வேறு எம்மொழியையும் நாடவில்லை. இந்திரனையும் மித்திரனையும் இந்த நாடு கடவுளாகக் கொண்டதில்லை. கடவுளரே தமிழில் பாடியிருக்கிறார்கள். வடமொழியைத் தலைக்கு மீது தூக்கி வைத்துக் கொண்டு ஆடுபவர்கள், ஒரு பிழைக்கும் வழிக்காகவே இதற்குப் பெருமையை அளிக்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



இன்று இதுதான் சமயம் என்று நாம் சொல்லிக்கொண் மருக்கிற தமிழ் நாட்டு சமயத்திற்கும் வட மொழிக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. வடமொழி வளர்ந்தது இங்குதான் என்றாலும் அதன் அடிப்படை ஐரோப்பாதான். "இனம்" ஒன்றின் மூலமாகவே தன்னை நிலைநிறுத்திக் கொள்வது அது. ஜெர்மானியன் ஒருவன் 'சம்ஸ்கிருதம்' தெரிந்திருந் தால் அவனைக் கொண்டு 'யக்ஞம்' செய்விக்கலாம். ஆனால் அதே மொழி தெரிந்த தமிழன் ஒருவன் செய்யக் கூடாது என்கிற நியதியைக் கடைப்பிடிப்பது வைதிகம்.

நல்லது. சம்பிரதாயங்கள் தமிழிலும் உண்டு. வடமொழி யில் சில குறிப்பிட்ட வேத சுலோகங்களைச் சொல்ல மாட் டேன் என்று தீயைக் கையில் வைத்து சத்தியம் செய்த பின் னரே தமிழ்நாட்டுக் கோயில்களில் சிலரைப் பூசை செய்ய அனுமதித்தார்கள். இம்மாதிரி பூசை செய்யும் பிராமணியர் களை வட நாட்டினர் 'திராவிட பிராமணர்' என்றே அழைத் தனர். (என்ன அது திராவிடர்? வேறொன்றுமில்லை- தமிழ் என்பது வட மொழியில் 'த்ரவிட்' என்று உச்சரிக்கப் பட்டது- அவ்வளவுதான். 'ஒற்றைக் கல் மன்று' என்பது 'ஒட்டக மண்ட்' என்று ஆங்கிலத்தில் மருவி, பின்னர் 'உதகமண்ட லம்' என்று தமிழுக்கே வந்தது போலத்தான்.) வேத காலத் திலும் இந்த நிலை இருந்தது. விசுவாமித்திரரை 'பிரம்ம ரிஷி' என்று கூறியதுண்டு. வசிட்டரை மறுத்துள்ளனர். வசிட்டர் பக்கம் சேர்ந்தவர்கள் அவரை பிரம்ம ரிஷி என்று பாட ஆரம்பித்தனர் என்பதெல்லாம் இந்தோ - ஆரியர்கள் வரலாற்றின் ஓர் அம்சமே தவிர, தென்னாடு சார்ந்தது அல்ல. 'இந்திய வரலாறு' என்று இந்தோ-ஆரியர் சம்பந்த முள்ளதை மட்டும் எடுத்துக் கொண்டுவிடுவதும், இங்கிருக்கும் எல்லோரும் இந்தோ-ஆரியர் என்று பரவிப்பதும்தான் ஒற்று மைக்குப் பங்கம் விளைவிக்கும் முதல் படி. ஏன், இந் நாடு இரு வேறு கலாச்சாரமுடையது, இந்தோ- ஆரியரும் தமிழ ரும் ஓர் இனமல்ல என்று வெளிப்படையாக- ஓர் உண்மை யாக எடுத்துக் கொள்ளக் கூடாது? இராமாயணத்தையும் பார தத்தையும் படிப்பதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. அந்தக் காலம் இருக்கட்டும்- இப்போதும் வட இந்தியா பெரும்பாலும் பெர்சிய, அரேபியக் கலாச்சாரத்தைத்தான் பின்பற்றியிருக் கிறது. முக்காடு போட்ட பெண் தமிழகத்தில் அபசகுனமா கக் கருதப் படுகிறாள். வெள்ளைப் புடவை இங்கே விதவைக் குரியது. வடநாட்டில் இதற்கு நேர்மாறு. மேலும் பார்ப்போம்.

—இன்னும் வரும்.

படிப்பகம்

www.padippakam.com

# வெடிப்பு

## வா. மு. கோமு

அருக்காணி கோவில் முன் சாமியாடுகிறாள் என்பது ஊருக்கே ஒரு ஆச்சரியமான செய்தியாய் தோன்றிற்று. அதிலும் ஊர் சிறார்களுக்கு குஷி பிய்த்துக் கொண்டு ஓடிற்று. வீட்டு தட்டு முட்டு சாமான்கள் போட்டது போட்டபடி கிடக்க, ஊர்ப் பெண்கள் கோவில் முன் கூடினர்.

அருக்காணி சாமியாடும் செய்தி ஊர் வண்ணான் மூலம் மணியக்காரருக்குத் தெரிவிக்கப்பட்ட உடனேயே அவரும் வில் வண்டியில் வந்து மாகாளியம்மன் கோவில் முன் இறங்கினார்.

அருக்காணிக்கு சொந்த ஊர் புளியம்பட்டி. அவள் இந்த சாலப் பாளைய கிராமத்திற்கு வந்து வருடம் இரண்டாகிறது. அருக்காணியின் கணவன் வேலுசாமிக்கு அருக்காணி மீது பிரியம் அதிகம். சதா எந்நேரமும் அருக்காணி முந்தானையை பிடித்துக்கொண்டு 'ருக்கு ருக்கு' வென்று திரிவான். அதுவும் கூட இந்த ஒரு மாதமாகத்தான் தடைபட்டது. அருக்காணியின் தங்கை பூவாத்தா வந்து சாலப்பாளையத்தில் இவர்கள் வீட்டிலேயே தங்கி இருப்பதால்தான்.

வேலுசாமியிடம் பழைய அட்லஸ் சைக்கிள் இருந்தது. அதில்தான் அவன் படிப்புக்காகச் சென்றதும் இப்போது வாத்தியார் வேலைக்குச் செல்வதும். அந்த சைக்கிள் வேலுசாமியிடம் இருபத்தைந்து வருடமாக உருளுகிறது. அந்தக்கிராமத்திலேயே வெளியூர் சென்று படித்து வாத்தியார் ஆனவன் அவன் ஒருவனே.

"எம் பையன் சிம்னி விளக்கப் பத்த வச்சூட்டு மொபாசுத்த வத்த எடுத்து வச்சு புடிக்க ஆரம்புச்சூட்டான்னா சோறாவது ஒன்னாவது? விடிய விடிய படிப்பான்யா! எவன்யா இந்த ஏரியாவுல அம்புட்டு படிப்பு படிக்கறது? யார் இருக்கா சொல்லுன்னேன்! என்ன...கையில துட்டில்ல. இல்ல, மவன கலெக்டரா த்தி பாத்திருப்பன்ல இந்நேரம்." வாயில் கசியும் கள் நுரையுடன் போதையில் முருகேச நாடார் ஊர் சந்து ஒன்று கூட விடாமல் சப்தம் போட்டபடி செல்வார்.

அவரும் இரண்டு வருடங்களுக்கு முன்பு மகனின் திருமணத்தை முடித்து வைத்து அடுத்து வந்த சில நாட்களுக்குள் ஊர் தென்னந் தோப்பிற்குள் ஓர் அகால வேளையில் செத்துப்போனார். அச்சமயத்தில் ஊர் மாகாளியம்மன் கோவிலில் விசேசம் தள்ளிப் போடப்பட்டு ஒரேயடியாய்த் தள்ளிப் போயிற்று. இப்போது கோவிலுக்குள் வெளவால்கள் பறந்தன. சிலந்திக் கூடுகள் நிலைத்து இருந்தன. சிறார்கள் விளையாட்டுக்குக் கூட கோவில் திடலில் கூட வேயில்லை.

விசயம் இப்படி இருக்க அருக்காணி கோவில் முன் சாமியாடுகிறாள் என்பது ஆச்சரியமான செய்தியாய் இருக்கையில் ஊரே அவளைச் சுற்றி பய பக்தியுடன் கை கட்டி நின்றது.

"டேய், போய் பறையடிக்கிறவனை கூட்டிட்டுவாங்கடா. சாமிய ஆடவிட்டு வேடிக்கை பாத்துட்டு இருந்தா செரியா?

படிப்பகம்

www.padippakam.com



போச்சா? டேய் கருப்பா ஓடு. ஓடி இழுத்துட்டு கையோட ஓடி வா. என்னாடா தலைய சொறிஞ்சுட்டு. ஜல்தியா ஓடுலே...'' என மணியக்காரர் சப்தமிட கருப்பன் ஓட்டமெடுத்தான்.

அருக்காணி ''டாய்'' என்ற மிரட்டல் குரலில் ''உஸ் உஸ்'' என புகைவிடும் உலைபோல சப்தமெழுப்பியபடி ஓடி ஓடி சுற்றிச் சுற்றி வந்தாள். இத்தனைக்கும் வேலுசாமி ஒரு பயமுடன் தன் மனைவியை பார்த்தபடி கூட்டத்தில் ஒதுங்கி நின்றிருந்தான். அவனை ஒட்டினாற்போல் பூவாத்தா கழுத்துச் செயினைக் கடித்தபடி நின்றிருந்தாள்.

மணியக்காரர்தான் முதலில் அருக்காணியைப் பார்த்து தன் முரட்டுக் குரலை தாழ்வாக்கிக் கேட்டார். ''சாமிக்கு என்ன குறையோ?''

அச்சமயத்தில் கூட்டத்தில் இருந்த சலசலப்பு ஓய்ந்தது. கேள்வி தனக்கு இல்லை என்பதுபோல அருக்காணி ஆடிக்கொண்டிருந்தாள். ஊர் வண்ணான் தன் புஜத்தை நிமிர்த்திய வண்ணம், அவள் முன் நின்று, ''எதாலது குத்தமிருந்தா சொல்லிடு தாயே'' என்றான். தொடர்ந்து ஊர்ப் பெண்கள் கொண்டு வந்த மண் குட நீரை வாங்கி அருக்காணி மீது மசாத சொதவென ஊற்றினான். மணியக்காரர் ஓரமாய் புறங்கை கட்டியபடி நின்றார். வேப்பிலைக்கொத்து ஒன்றை ஒருவன் கொண்டு வந்து அருக்காணியின் கைகளில் திணித்து பிடிக்கச் செய்தான். அந்த சமயம் 'டம டம டமடம்' என்னும் பறை ஒலியுடன் கருப்பனுடன் பறையடிக்கிறவனும் கூட்டத்தினுள் புகுந்தான்.

''ஏன்டா எல்லாருமா சேர்ந்து என்னை இப்படிப் பண்ணி வச்சிருக்கீங்க?'' அருக்காணி வேப்பிலைக் கொத்தை வாயில் கடித்து மென்றபடி கூட்டத்தாரை நோக்கி கேட்டாள்.

''தாயே, வருசா வருசம் உனக்கு பொங்க வைக்க ஏற்பாடு பண்ணுறப்பவெல்லாம் ஊர்ல சாவு வுழுந்துருது தாயே! நாங்க என்ன செய்ய?''

''இதானா உங்க காரணம்?''

''ஆமா தாயே. இந்த வருசம் ஊர்ல சாவு வுழாம நீ பாத்துக்க... உனக்கு கெடா வெட்டி பொங்க வைக்கிறோம்''

''அத நாம் பர்த்துக்கறேன்.''

''தாயே காடெல்லாங் காஞ்சு போயி கெணத்துலே தண்ணி குறைஞ்சு போச்சே!''

''அதையும் நாம் பாத்துக்கறேன்.''

இதன் பின் அருக்காணி மீது ஏவப்பட்ட கேள்விகளுக்கு பதில் எதுவும் வரவில்லை. தொடர்ந்து 'தொப்'பென் சரிந்தாள்.

''சாமி மலை ஏறிடிச்சு டோய்.'' சிறார்கள் கூவினார்கள்.

அதன் பின்—

அதன் பின்தான்—

எல்லாமே மாறிப்போயிற்று அருக்காணிக்கு. ஊர் சேந்து கிணற்றில் அருக்காணி மண் குடமுடன் நீரெடுக்க வருகிறாள் என்றதும் பெண்கள் பயத்துடனோ அல்லது மரியாதையுடனோ ஒதுங்கிப் போயினர். எப்போதும் ஊர் கதைகளை இவளிடம் பேசும் கண்ணாத்தா இப்போது அருக்காணியை வழியில் கண்டதும் ஒதுங்க ஆரம்பித்தாள். அருக்காணி

படிப்பகம்

www.padippakam.com



இவர்கள் ஒதுங்குவதைக் கூட கண்டும் காணாமல்தான் இருந்தாள். ஆனால் தொட்டுத் தாலி கட்டிய கணவனே ஒதுங்கிப் போகையில் என்ன செய்வாள்? மூலையில் சுருண்டு வேதனையில் அழுதாள். இப்போது கையில் குட நீருடன் வந்தவள் கோவில் முன்பாய் நின்றாள்.

"நீ என்ன மசுத்துக்கு என் உடம்புல பூந்து ஆடுனே? நீ எதுக்கு என் வூட்டை கெடுக்கப் பாக்கே? ஊர் மணியக்காரனே உம் மேல அக்கறைப் படாம கெடயாப் போட்டுட்டான். உன் ஊடு குட்டிச்சுவராப் போனா உனக்கு மட்டும் ரோசசம் பொத்துட்டு வந்து என்ன கத்த வச்சல்ல! நீ நல்லா இருக்க கோணும்முன்னா நான் எக் கேடா கெடணுமா? உம் பொலம்பல பொல்ம்ப நானா கெடைச்சேன்? நீ என்னத்துக்கு..." கோவில் முன் புலம்பித் தீர்த்துவிட்டு அருக்காணி வீடு கிளம்பினாள். தண்ணீர் குடமுடன் வீட்டு வாயிலில் நடந்தவள் கண்களுக்கு திண்ணையில் புத்தகமுடன் அமர்ந்திருந்த வேலுசாமியைப் பார்த்தாள். அவனும் இவளைப் பார்த்தவுடன் எழுந்து நின்றான்.

"யக்கோவ்" உள்ளிருந்து பூவாத்தா குரல் கொடுக்கவே நிலையிழந்து புருசனைப் பார்த்தபடி நின்றவள், "ஏன்டி" எனக் குரல் கொடுத்தவாறே உள்ளே சென்றதும், வேலுசாமி அமர்ந்து மறுபடியும் புத்தகத்தில் ஆழ்ந்தான்.

"உன்னை யாரு தண்ணி எடுக்க போவச் சொன்னது? நான் வேணாம்னு சொல்லி இருந்தேன்ல?"

"ஏன்டி நீயுமாடி என்னை:" பேச முடியாமல் கேவ ஆரம்பித்தாள்.

"அக்கா, இன்னும் கொஞ்ச நாளைக்கு நீ ஏதும் செய்ய வேணாம். இந்தத் தபா கோவிலுக்கு மச்சானை கெடா வெட்டச் சொல்லியிருக்கேன். பொங்க கெடா. அதும் முதக் கெடா நம்முளுது. அதுக்குப் பின்னாடி நீ பழையபடி எங்கே வேணாலும் போ. உன்னை தடுக்கல்ல இப்ப நீ அழறதை நிறுத்து. வெளியே மச்சான் ஏந்தா பொசுத்தவம் படிக்கறாப்ல."

முன்பெல்லாம் சிறிது கேவினாலும் மடியில் போட்டு தேற்றிவிடும் புருசன இப்போது சத்தம் போட்டு அழுதும் வரலியே என்ற ஏக்கத்தால் அருக்காணி பாயில் போய்ச் சுருண்டாள்.

டம டம டம வென வெளியே சப்தம் கேட்டது. தெருக் கோடியிலிருந்து சிறார்கள் கூட்டம் தமுக்கடிப்பவனை சுற்றி உய் உய் என சப்தமிட்டபடி வருவதும் கேட்டது. பூவாத்தா வீட்டில் இருந்து வெளிப்பட்டாள்.

"ஊர்ல இன்னைக்கி ராவுல சாமி சாட்டுதுங்கோய்! எல்லாரும் ஊர் கோயிலுக்கு வந்துருங்கோய்," டம டமடம வென தமுக்கடித்துப் போனான்.

இரவில் வேலுசாமியும் பூவாத்தாவும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் கோவிலுக்கு வர மறுத்துவிட்டாள் அருக்காணி. ஆரம்பத்தில் ஒருமுறை வேலுசாமி "வா" என கூப்பிட்டதோடு சரி. அது கூட தவறோ என்ற யோசிப்பில் வெளியில் சென்று நின்று கொண்டான். பூவாத்தா சண்டையிட்டுவிட்டுக்கிளம்பினாள்.

படிப்பகம்

www.padippakam.com



இருவரும் போவதைப் பார்த்தபடி திண்ணையில் அமர்ந்தாள் அருக்காணி.

'அருக்காணி, அருக்காணியென ஆசையோடு கட்டிக்கொள்ளும் புருசனுக்கு இந்த ஒரு வாரமாய் எப்படி வெளியே படுக்க முடிந்தது? ஒரு வேளை பூவாத்... சே..சே அது மாதிரி நடக்கிற ஆளா அது? எனக்கேன் இப்படி யோசனை போவுது? இப்படியே போனால் அதே போல ஆனாலும் ஆகும். வரட்டும் இரண்டில் ஒன்னு கேக்கணும்.' யோசனையில் திண்ணையிலேயே தூங்கிப் போனாள். நடுச்சாமத்தில் பூவாத்தாதான் தட்டி எழுப்பி உள்ளே போய்ப் படுக்குமாறு கூறினாள். தூக்க கலக்கமாய் எழுந்து பார்த்தவள் கண்களுக்கு ஓரமாய் கை கட்டி நிற்கும் புருசன் தெரிந்தான்.

"ஐயோ, ஏன் இப்படி பாக்கே? குளுரு வீசுதுல்ல. உள்ளார போ. பைத்தியமா?' என்றாள் பூவாத்தா.

"ஆமாடி. பைத்தியந்தான். நீ உள்ளே போ. நான் அவர் கிட்ட பேசணும்" என்க, புரிந்தாற் போல் உள்ளே போய் விட்டாள்.

"எம் பக்கத்துல வந்து உட்காருங்க."

"இல்ல, வேணாம். நான் இப்பிடியே நிக்கேன்."

"ஊரே என்னை பைத்தியம் பிடிச்சவளா பாக்குது. நீங்களும் இப்படிப் படுத்தினா நான் எங்க போவன்?"

"சரி என்ன வேணும்?" 'எனக் கேட்க நினைத்து மௌனமாகவே நின்றான் வேலுசாமி.

"இப்படி நீங்களும் பேசாம நிக்கிறது வெந்த புண்ணுல வேல பாச்சுறாப்ல இருக்கு. எனக்கு பயமா இருக்குங்க. எங்கே நீங்க இப்படியே ஒதுங்கி போயிடுவீங்களோன்னு. சுத்தமா... இந்த ரெண்டு வருசமா என்னோட ஒட்டாம படுத்தா தூக்கம் வருமா உங்களுக்கு? எப்படிங்க? ஒருவேளை பூவாத்தாவ..."

"என்ன சாமி தப்பு தப்பா பேசிட்டு... இந்தக் கேள்விய எப்படி சாமி என்னைப் பாத்து...சாமி என் குடும்பம் நல்லா இருக்கனும் சாமி. உனக்கு இந்த வருசம் கெடா வெட்டிடுறேன் சாமி... என்னைப் போயி தப்பா பேசாதீங்க சாமி."

வார்த்தைக்கு வார்த்தை சாமி போட்டுப் பேசும் புருசனைப் பார்த்து அவள் கலங்கினாள். இன்னும் அவள் சாமியாடிதானா?

கிடா வெட்டியதும் எல்லாம் பழையபடி ஆயிடுமா?

'ஆயிடணும், ஆயிடணும்' என உள்ளுக்குள் உருகினாள்.

## நேசம் பேசும் வாசகர்கள்

சென்ற இதழுக்கான வாசகர் கடிதங்கள் புதிய வரலாற்றைப் படைத்துள்ளன. 66 கடிதங்கள் விரிவானவை. எழுதாதவர்கள் எல்லாம் எழுதினர். படைப்புகள் குறைந்தன பற்றி 5 கடிதங்கள் சுட்டின. மேலும் ஒன்று அது பற்றிய கண்டனம். 3 தனிப்பட ஆசிரியருக்குப் பரிவு சொல்லின. மற்ற 57 உம் பாராட்டும் மேல் சிந்தனையுமாக. மனமார்ந்த நன்றி. தொடர்ந்து உங்கள் கருத்துகளை வேண்டுகிறோம். —ஆசிரியர்

படிப்பகம்

www.padippakam.com

## தி. கமலி

### கல்யாணம்

பூக்கள் சிரிக்கும்
மொஸய்க் தரை:
அபார்ட்மென்ட்டின்
மூன்றாவது மாடியில்
வசதியான வாழ்க்கை:
கழுத்து நிறைய
நகை பூட்டி,
கல்யாணம் செஞ்சு வச்சதுல
அக்கா மகாலட்சுமி
அமோகமாத்தான் இருக்கா.
கடன் உடன் பட்டு
கட்டிக் குடுத்த
நாங்கதான்
நசிஞ்சு போயிட்டோம்.



### பாரம்பரியம்

பாட்டன் பேரைப்
பேரனுக்கு வைப்பது
தலைமுறை.
பாரம்பரியமாய்
வைத்துப் போவது
என்னவோ
தலைச் சுமைதான்:
பீற்றல் வீடும்
பெந்தகக் கடனுமாக.

### தேவை

முப்பது நாள்
மூச்சு பிடித்து
ஒப்பேற்றிவிட்டால்
ஒன்னாம் தேதி சம்பளம்.
தேவைகளின் பட்டியலுக்குக்
கொடுத்துத் தொலைத்தபின்
கையில் மிஞ்சுவது
வறுமைத் திருவோடு.
நடுவில் ஏதும் நேர்ந்தால்
அட, பரவாயில்லை போ:
அரசு அளிக்கும்
கருணைத் தொகை இருக்கு.
இருந்து சாதிக்காததை
இறந்து சாதிச்சா சரிதான்.



### ராசி

பக்கம் பக்கமாய்ப்
பாடம் பண்ணிய
பா விருத்தங்கள்
பயன்படுத்துவாரற்று
ஹைகூவாச்சு.
நெட்டுருப் போட்ட
நன்னூலும் தொல்காப்பியமும்
தேவையே இல்லாமல்
புதுக்கவிதை உருவாச்சு.
நான் தொட்டால் மட்டும்
எல்லாமும் ஏன்
தேவையற்றுப் போகணும்?

படிப்பகம்

www.padippakam.com

## நெஞ்சு பொறுக்குதிலையே!

### பாரதிக்கு மட்டும்தானா?

இரவோடு இரவாக வீட்டை விட்டு ஓடியோ, வஞ்சகமாகக் கடத்தப்பட்டோ, பம்பாய் சிகப்பு விளக்குப் பகுதியில் ஒதுங்கிவிடும் பெண்களை அவர்களின் உறவினர்கள் தேடிப்பிடித்துத் திருப்பி யழைத்துக்கொண்டு வருகிறார்களே — அப்பெண் களைப் பரிவோடு நடத்தி, தங்களை நேசமிக்க மனிதர்களாய் உயர்த்திக் கொள்வதற்காகவா, அல்லது தங்களின் வக்கரித்த நிந்தனைகளுக்கு அவர்களைப் பலியாக்கித் தங்கள் இருப்பை இழிவு படுத்திக் கொள்வதற்காகவா? இந்திய மக்களுக்கு இது போன்ற தருணங்களில் சுரக்க வேண்டிய மனிதாபிமான உணர்வின் ஊற்றுக் கண்ணை அவர்களுடைய மதங்கள் திறந்திருக்கின்றனவா?

சமீபத்தில் காஞ்சிப் பெரியவர்களின் நூற் றாண்டு விழாவுக்கு வருகை தந்த- என்பத்தைந்து கோடி இந்திய மக்களின் பிரதமர் திரு நரசிம்ம ராவ் அவர்கள் அருள்திரு ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் பாதங்களில் விழுந்து வணங்கினார். தொலைக்காட்சியில் 'தடங்கலுக்கு வருந்'தாமல் தெளிவாகக் காட்டினார்கள். அவர் பாதங்களில் சிரம் வைத்து வணங்கியபோது,- 'தமது கையை விட்டு அகலக் கூடாத தண்டத்தையே தூக்கிக் கடாசி விட்டு, இரவோடிரவாக, யாருக்கும் தெரி யாமல் மடத்தை விட்டோடி, தலை மறைவாய் இருந்துவிட்டுத் திரும்பி வந்தவரின் கால்களைப் பற்றுகிறோமே' என்று மனம் துணுக்குற்றிருப் பாரா? ஆசார்ய பக்தியில் நிஷ்டூரமான சகிப்புத் தன்மையை வைதிக மதம் சாத்யப்படுத்துகிறதா?

வைதிக மடத்துப் பெரியவர்கள் எவரும் சித் தர்களோ யோகிகளோ அல்லர். மடத்தில் குவி யும் ஏராளமான சொத்துகளையும் அவை தரும் சுகங்களையும் நிர்வாகம் பண்ணும் தலைவர்கள். மடத்தின் சீராட்டலில் ஆசான்களை அமர்த்திக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டு, சம்ஸ்கிருதத்தில் சொல்லப்பட்டுள்ள வைதிக தர்மங்களையும், அவற்றை மக்களிடையே பயிர் செய்யத் துணை புரியும் சில மொழிகளையும் கலைகளையும் கற்று, காலில் விழுகிறவர்களைக் கை தூக்கி ஆசீர்வதிக்கப் பயிற்சி பெற்ற பீடாதிபதிகள். அவர்களை ஞானிகளாகவோ, முனிவர்களாகவோ, தவசீலர்களாகவோ, மகான்களாகவோ போற்றுவது பக்தர்களின் மனப் பக்குவத்தைப் பொறுத்தது. சில பத்தாண்டுகளுக்கு முன் தாம் சித்தி பெறும் வேளை நெருங்கிவிட்டதாகக் கணித்து, தம் சமாதிக்கு ஏற்பாடு செய்துகொண்டவர்கள்தாம் காஞ்சி மகா பெரியவர்கள். நாம் செய்த யோகம் அவர்கள் சித்தர் பரம்பரை யல்லரால் அவர்களுக்குச் செய்வித்த கனகாபிஷேகத்தை நம்மால் காண முடிந்தது.

திரு ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளைப் பிரதமர் விழுந்து வணங்கியதற்குக் கைமேல் பலன் கிடைத்திருக்கிறது: 'பிரதமர் ஒரு கோடியை அன்பளிப்பாய்ப் பெற்றிருந்தால் அது தப்பில்லை' என்று சுவாமிகள் நியாயம் கற்பித்துவிட்டார்கள். மேலும், 'கோடியைக் கொடுத்ததாகச் சொல்லும் பங்குத் தரகரை நாடு கடத்த வேண்டும்' என்றும் தீர்ப்பு வழங்கியுள்ளார். பிரதமர் பெறுவது தப்பில்லை என்றால் கொடுத்தவர் ஏன் கடத்தப்பட வேண்டும் என்பது தெரியவில்லை. ஒருவேளை கொடுத்தது கொஞ்சம், கொள்ளையடித்ததோ பல ஆயிரம் கோடிகள் என்பதாயிருக்கலாம். கொள்ளையடிக்கிறவன், தான் கொள்ளையடித்ததில் கொஞ்சத்தை, மேலும் கொள்ளையடிக்கத்தானே காணிக்கை செலுத்துகிறான்? காஞ்சிப் பெரியவர்களை 'லோக குரு' என்பார்கள். அவர்கள் இப்படி 'ராஜகுரு' வாகச் சுருங்குவதை பக்தர்கள் சகித்துக்கொள்வார்களா?

இந்தியா முழுவதிலும் இருந்து எல்லா அரசியல் பெருந்தலைகளும் வந்து (நாமக்காரர்கள் தவிரவோ!) காஞ்சிப் பெரியவர்களின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்றனர். ஆனால், தமிழக முதல்வர் மட்டும் இதற்கு விதிவிலக்கு! இப்படியான ஒதுக்கம் அவருக்குத் தனிப்பட்ட முறையிலும் சரி, அரசியல் ரீதியாகவும் சரி, நல்லதில்லையாம். குறைபட்டுக் கொள்கிறவர் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு வெங்கட்ராமன் அவர்கள் என்கிறது நாளிதழ்ச் செய்தி. இந்தியாவில் மதச் சார்பு அல்லாத அரசு ஆள்வதாகச் சொல்கிறார்கள். காஞ்சி சங்கர பீடமோ அரசியல் மையமாகச் சித்தரிக்கப்படுகிறது. உண்

படிப்பகம்

www.padippakam.com



மையில் பீடங்கள் எப்போதும் இதைத்தான் செய்துகொண்டிருந்தன என்பதும், பீடாதிபதிகள் ராஜ குருக்கள்தாம் என்பதும் இதனால் பெறப்படுகிறதா?

காற்றில் கையை நுழைத்து, கையடக்கமான பொருள்களைப் பறித்துக் கொடுக்கும் சத்ய சாயி பாபா அவர்களின் பிரசாந்தி நிலையத்தில் நால்வரின் கொலை. சாயி பாபாவைக் கொல்ல முயற்சியாம். எனில், அவர் செய்து காட்டியதெல் சித்துகள்தாமா? மாய வித்தைக்காரன் இவரை விடப் பெரிய பெரிய பொருள்களையெல்லாம் கொண்டுகாட்டுகிறான்தானே. இத்தனைக்குப் பின்னும் அவர்கள் இறை மனிதர்களாகவே நிலைகொள்ள முடிகிறது. எப்படி? இந்திய மனோபாவத்தில் ஓர் உள்ளுணர் பிறவிக் குணமாக மனிதர்களைத் தரப்படுத்தும் கட்டமைப்பு வேரூன்றி நிலை கொண்டிருக்கிறது.

இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சங்கர்தயாள் சர்மா அவர்கள் திருப்பதி வெங்கடாசலபதியின் பரம பக்தர். திருப்பதிக்கு வந்து, மொட்டையடித்து, மீசை மழித்து, மண்ணில் உடல் கிடத்தி வலம் வந்து சேவிப்பதில் பரமானந்தம் காண்பவர். தம் பதவிக் காலத்தில் கின்னஸ் சாதனைப் பட்டியலில் இடம் பெறும் அளவுக்கு அவரது திருப்பதி தரிசனம் தொடரும் என்று எதிர்பார்க்கலாமா? இவர் குடியரசுத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்ட போது, இவருடைய பல சிறப்புகளுக்கும் மகுடமாக ஒரு சிறப்பு சொல்லப்பட்டது. அதாவது இவர் சம்ஸ்கிருதத்தில் பாண்டித்தியம் மிக்க மேதை என்று. சொன்னவர் அன்றையக் குடிரசுத் தலைவர் திரு வெங்கட்ராமன் அவர்கள்தாம். பரந்த படிப்பாளி, சம்ஸ்கிருத விற்பன்னர். ஆயினும் இவரது பக்தி சாரசரி இந்தியப் பாமரனின் ஆலய பக்திக்கு மேலாக ஒன்றும் விரியக் காணோமே.

சம்ஸ்கிருத மேதைமையே அதுதான். சம்ஸ்கிருதத்திற்கு ஆயிரம் மேன்மைகள் இருக்கலாம். ஆனால், மனிதர்களை வேற்றுமைப் படுத்துவதைச் சமூக தர்மமாகப் போதிக்கும் ஒரே மொழி சம்ஸ்கிருதம்தான். இந்த வேற்றுமைத் தத்துவத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காகத்தான் அது வேத்மாழியாகப் பொத்தி வைக்கப்பட்டது. அதனை வேத மொழியாக ஆராதிக்கிற எவனுமே மனுக் கொள்கையைத் தனது வைதிக தர்மமாக ஏற்றுக்கொள்கிறவன்தான்.

படிப்பகம்

www.padippakam.com

# நாற்று

★

பிறருக்கு நீ பயன்படும்போது பெருகும் உவகை வேறெந்தச் சேமிப்பாலும் மாற்று செய்ய முடியாதது. அது ஒருவகை இன்பம். இன்பம் என்பது தேடிக் கொள்வதல்ல; தேடிக் கொடுப்பது.

★

'தாயைப் போலப் பிள்ளை' என்பதும் 'நூலைப் போலச் சேலை' என்பதும் ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துகள். சேலையே நூலால் ஆவதால் நூலைப் போலச் சேலையாகலாம். ஆனால் தாயும் பிள்ளையும் வேறு வேறல்லவா? ஒன்றுபோலாவது எப்படி? ஆகிறார்கள் எனில், பெற்றவர்களும் பிள்ளைகளும் ஒரே கிடையில் மடக்கப்பட்ட பட்டி மாடுகளாய் உழல்வதால் ஏற்படும் சோகம் என்றே படுகிறது.



★

பெற்றவர்களின் சுற்றமும் சூழலும் பிள்ளைக்கில்லாமல் கலைத்துப் போட்டுவிட்டால், அப்பனும் பிள்ளையும் தனித்தனி முழுக்களாகவே வேறுபடுவார்கள். பார்த்துப் பயில்வதுதான் கல்வியின் முதல் படி என்பதால், திருடனை அருகிருந்து பார்த்தும் அவனோடு பழகியும்தான் அவன் மகனும் திருடனாகிறான்.

★

பாலுணர்வு முற்றி வெடிக்கு முன் ஒரு குழந்தை என்னவாய்ப் பக்குவப் படுகிறானோ, அன்னவனாகவே அவன் நிலைப்படுவான். இந்த தேசம் காலிகளின் கூடாரமாவதற்கு முக்கியக் காரணம் குழந்தைகளைப் பயிற்றத் தெரியாததும் அவர்களுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கப் பெற்றவர்கள் மறந்து போனதும்தான்.

★

எங்கு பார்த்தாலும் வஞ்சக நண்பர்களின் கூட்டமே. நான் அச்சமின்றி வாழ நேர்மையான பகைவர்களை எப்போது பெறுவேன்!

படிப்பகம்

www.padippakam.com

Kavithaasaran, July 1993. Regd. No. TN/MSN/746
CREATIVE LITERARY MONTHLY IN TAMIL. R. Dis. 5479/90

படைப்பிலக்கிய வெளியீட்டாளர்கள்:

மூசா இலக்கியம்
MUSA ILAKKIYAM

31, டி.கே.எஸ். நகர், சென்னை-600019

சந்தாதாரர் ஆகுங்கள்
சந்தாதாரர் ஆக்குங்கள்

படிப்பகம்